www.tamilarangam.net

# சிந்தனை

ஆனி - 1993







- மகாணசபைத் தேர்தல்கள்
- ஒரு சர்வதிகாரியின் மரணம்
- கிட்லரின் வாரிசுகள்
- கேள்விகள் உருவாகின்றன (சிறுகதை)
- இலக்கியச்சந்திப்பு


**SINTHANAI 2/93**

SAMAR
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சிந்தனை



ஆரம்பம் 1985

சுதந்திரமான கருத்துப்
பரிமாறல்கள் மூலமே சிந்தனை
உருவாகின்றது.

**2 / 93**

*15/06/1993*

ஆறு இதழ்களுக்கான சந்தா

30 டி.எம்

சகல தொடர்புகளுக்கும்



SINTHANAI
HAUSSMANNSTR.107,
70188 STUTTGART
GERMANY


## உங்களுடன் சில வார்த்தைகள்............

1985ல் ஆரம்பித்த எமது பத்திரிகை, வாசகர்களின் ஆதரவு, எமது நோக்கில் எமக்கிருக்கும் தளராத நம்பிக்கைகள், ஆகியவற்றினால் தொடர்ந்தும் வெளி வந்து கொண்டிருக்கின்றது. எனினும் உயர்ந்து வரும் உற்பத்திச் செலவுகள், 60% தினால் உயர்ந்து விட்ட தபாற் செலவுகள் ஆகியவை பத்திரிகையின் நிதி நிலமைகளை வெகுவாகப் பாதித்துள்ளன.

இந்த நிலமைகளில் தொடர்ச்சியாக சிந்தனையை வெளிக் கொண்டு வருவதற்கு வாசகர்களினதும் ஆதரவாளர்களினதும் நிதி உதவிகளைப் பெருதும் எதிர் பார்க்கின்றோம். சந்தாக்களைப் புதுப்பிக்காத வாசகர்கள் சந்தாக்களைச் செலுத்துவதன் மூலமும், நிதி உதவிகளை செய்வதன் மூலமும் சிந்தனை தொடர்ச்சியாக வெளி வர உதவ முடியும்.

இந்த இதழிலிருந்து ஆறு சிந்தனை இதழ்களுக்கான சந்தாத் தொகையை 30 டி.எம். ஆக உயர்த்தியுள்ளோம். வாசகர்கள் இதை விளங்கிக் கொள்வார்கள் என்றும் நம்புகின்றோம்.
மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

ஆ.கு.

அட்டைப் படம்;

உலகத்தின் சுமைகளையெல்லாம்
சுமக்கும் மூன்றாமுலக மனிதன்

ஓவியர்: காமினி தன்வத்த.

www.tamilarangam.net

# மாகாணசபைத் தேர்தல்கள்



**தேர்தல்கள் ....................................-**
**ஐந்து வருடத்திற்கு ஒரு முறை ஆளும் வர்க்கங்களின் பிரதிநிதிகளை, தம்மை தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்த, மக்கள் தேர்ந்தெடுக்க கொடுக்கப்படும் சந்தர்பம் !**
**மக்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் வெப்பமானி !!**
**எமது கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல ஏற்படும் சந்தர்ப்பம் !**
**தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆளும் வர்க்கப் பிரதிநிதிகள்தான் ஏராளம்.**
**வெளிக்காட்டப்பட்ட மக்கள் உணர்வுகள் எமக்குக் கசப்பானவைதான் !**
**கருத்துக்கள் சென்றடைந்தது எத்தனை பேரிடம்..............?**

இருந்தாலும் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல் முடிவுகளைப் சற்று நோக்குவது அவசியம் .

இரண்டு பெரிய அரசியற்படுகொலைகளைத் தொடர்ந்து நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்கள் பல அரசியல் நிலமைகளை வெளிக்காட்டியுள்ளது.

அரசியல் படுகொலைகள் - தனி நபர் பயங்கரவாதம் - எதையுமே சாதிக்க முடியாது என்பதுதான் உண்மை. ஒரு முதலாளித்துவ அரசியல்வாதியைப் படுகொலை செய்வதினாலோ, அல்லது ஒரு சர்வதிகார ஜனாதிபதியை குண்டுவைத்துச் சிதறடிப்பதினாலேயோ ---- இறுக்கமாக, ஸ்திரமாக ஆட்சியிலிருக்கும் அரச யந்திரத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி விடமுடியாது. சில உடல்கள் சிதறுகின்றன. சில புதிய முகங்கள் பழைய இடத்தில் தோன்றுகின்றன. மற்றப்படி எல்லாம் பழையபடியே தொடருகின்றன. புதிய தனிநபர்களின் குணாம்சங்களில், நம்பிக்கைகள், நப்பாசைகள் கொண்டவர்கள் சிலர் தப்புக்கணக்குகளைப் போடலாம். இவர்கள் எப்பொழுதுதான் சரியான கணக்குப் போடுகிறார்கள்? இந்த ஆளும் வர்க்கங்களுக்குள் ஏற்படும் தலைமாற்றங்கள் அவர்களைத்தவிர யாருக்கும் உதவப் போவதில்லை.

இந்தக் கொலைகள் 1983இலும் பார்க்க பாதிப்புக்களை ஏற்படுத்தும் இனக்கலவரங்களை உருவாக்கி ஆட்சியிலிருப்பவர்களை நிலைகுலையச் செய்யும் என்ற ஆருடங்களும் பலிக்கவில்லை. மாறாக ஆட்சியிலிருந்தவர்கள் ஜனாதிபதியின் இரத்தத்தில் சூடு ஆறமுன்னமே பாதுகாப்பு அமைச்சில் கூடி பதில் ஜனாதிபதியைத் தெரிவு செய்து பாதுகாப்புக்களை உறுதி செய்து கொண்டுதான் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி இறந்த செய்தியை அறிவித்தார்கள்.

மறுபுறத்தில் இந்த மரணங்கள் நடைபெற்ற தேர்தலில் அனுதாப அலைகளை உருவாக்கும் என்ற எண்ணங்களும் அவ்வளவாகப்பலிக்கவில்லை. பிரேமதாசாவின் கொலை மக்களின் மனங்களிலிருந்து -- அவர் இறந்த இடம் கழுவித் துடைக்கப்பட்டது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போலவே — அகற்றப்பட்டு விட்டது என்ற எண்ணமே ஏற்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலமைகளில் வடக்கு - கிழக்கு தவிரந்த மற்றைய மாகாணங்களில் பிரதேச ரீதியாக வாழும் மக்கள் இன்றைய அரசாங்கம், எதிர்கட்சிகள் ஆகியவற்றைப்பற்றி ( சரியாகவோ, தவறாகவோ ) என்ன கருத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்தத் தேர்தல் ஓரளவு காட்டுகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி , தொண்டமானின் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவை ஒரு புறமாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி, லலித் — காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி, நவசமசமாஜக் கட்சியின் தலைமையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் மக்கள் விடுதலை முன்னணியும் இன்னும் சில சுயேச்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிட்டன.

## 50%மான மக்களின் எதிர்ப்பு

முழுமையாக அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் 46.9%மான வாக்காளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் 36%மான வாக்காளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், 15%மான வாக்காளர்கள் ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வாக்களித்துள்ளார்கள். பிரதேச ரீதியாக இந்த வீதங்களில் பெரும் மாற்றங்களைக் காணக் கூடியதாக இருந்தது. ஐக்கிய தேசியக்கட்சி, கிராமப்புறங்களிலும், மலையகத்திலும் பெரும் தொகையான வாக்குகளைப் பெற்றது. நுவரெலியா, பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் 55%க்கும் அதிகமான வாக்குகளையும், மாத்தளை, புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 50%க்கும் அதிகமான வாக்குகளையும் பெற்றுள்ளது. இதற்கான முக்கிய காரணம் தொண்டமானின் பின்னால் திரண்டிருக்கும் மலையகத் தமிழர்களின் வாக்குகளும், பிரேமதாசாவின் "வெள்ளை வேட்டி கட்டிய ஏழை பங்காளன்" என்ற மாயையில் மயங்கிய கிராமப்புற மக்களின் வாக்குகளுமேயாகும். நகர்ப்புறங்களில் உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவுகளினால் பாதிக்கப்பட்ட தொழிலாள மற்றும் நடுத்தர வர்க்க மக்களின் வாக்குகளை அதிகமாகப் பெற இந்தக்கட்சியினால் முடியவில்லை. தொழிலாளர்களும் நடுத்தர மக்களும் அதிகமாக வாழும் மேற்கு மாகாணத்தில் இது தெளிவாக வெளிக்காட்டப்பட்டது. (கொழும்பு மாவட்டத்தில் 37.5%மான வாக்குகளையே இந்தக்கட்சி பெற்றது. ) அதே போல 1989/90களில் அரச படைகளின் கொலை வெறியாட்டங்கள் நடை பெற்ற தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியவற்றில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான வாக்குகளின் தொகையே அதிகமாகும். மலையக மக்களின் வாக்குகளே ஐக்கிய தேசியக் கட்சியைக் காப்பாற்றியது என்றும் சொல்லலாம். ( 1977, 1983 இனக்கலவரங்களுக்குக் காரணமாக இருந்த ஐக்கிய தேசியக்கட்சித் தலைமைப் பீடம் பிரேமதாசாவின் கொலைக்குப் பின் இனக்கலவரத்தைத் துண்டாது விட்டதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்)

## மூன்றாவது முதலாளித்துவக்கட்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குப்பலத்தைப் பலவீனப்படுத்தும் என எதிர்பார்த்த ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 2/3 பங்கு வாக்குகளையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து 1/3 பங்கு வாக்குகளையும் பெற்றிருந்தது. ஜனநாயக ஐக்கிய முன்னணியின் செல்வாக்கு அதிகமான பிரதேசங்களில் ஐக்கிய தேசியக்கட்சியின் வக்குகள் 10%தினாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வாக்குககள் 5%தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளன.

மூன்றாவது முதலாளித்துவக் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தோற்றமானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அதிவலதுசாரி வாக்காளர்களைத் தன்பால் இழுத்துள்ளது என்பதைக் காணக் கூடியதாக உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வலதுசாரி வாக்குகள் ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் பால் சென்றதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் வலதுசாரிகளின் வெற்றிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இனவாத "ஹெல உருமைய" குழுவைச் சேர்ந்தவர்கள் முற்றாகத் தோல்வியடைந்துள்ளனர். அதே சமயம் பொதுஜன முன்னணியைச் சேர்ந்த (ல.ச.ச.க., கமு.க. ) இடதுசாரிகளின் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது.

இந்தத் தேர்தலில் பரவலான வாக்களிப்புக்களும் குறிப்பாக மேற்கு மாகாண தேர்தல் முடிபுகளும், தொழிலாளர்களும், மத்தியதர வர்க்கத்தினரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றீடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் பழைய இடதுசாரிக் கட்சிகளையுமே எண்ணுகிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

## இடதுசாரி முன்னணி

முதலாளித்துவ ஐக்கிய தேசியக்கட்சி, அதற்கு எதிரான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டு ஆகியவற்றை விடுத்து மூன்றாவது முன்னணியாக நவசமசமாஜக் கட்சியின் தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி இந்தத் தேர்தலில் போட்டியிட்டது. பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றும் நோக்கங்கள் இந்த முன்னணிக்கு இல்லாது, தேர்தல் மேடைகளைப் பாவித்து சரியான இடதுசாரிக் கருத்துக்களை மக்கள் முன் வைப்பதும், இதன் அடிப்படையில் ஒரு எதிர்ப்பியக்கத்தை கட்டி வளர்ப்பதும் முக்கிய நோக்கமாக இருந்தது. இந்த இடதுசாரி முன்னணி கீழ்க் கண்ட விடயங்களில் இணக்கம் காணப்பட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கப்பட்டது:

1. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் நிபந்தனைகளை நிராகரித்தல். தனியார் மயப்படுத்தலை ரத்துச் செய்தல்.

2. தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், தமிழ் கட்சிகள் முன் வைத்த நான்கு அம்ச திட்டத்தையும் ஏற்றுக் கொள்ளல்.

3. உழுபவனுக்கு நிலம், நீர் வரி மற்றும் விவசாய மானிய வெட்டுக்களை எதிர்த்தல்.

4. சர்வதிகார யாப்பைத் துக்கி எறிந்து வேலைத்தல குழுக்களை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக அமைப்பை உருவாக்கல்.

இந்த முன்னணி ஒரு வீதமான (59514) வாக்குகளைப் பெற்றது. பாரம்பரிய பழைய இடதுசாரிகளை இன்னும் மாற்றீடாகக் கருதும் மக்கள் மத்தியில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் நாலு அம்சத் திட்டத்தையும் முன்வைத்துப் போட்டியிட்ட இந்த இடதுசாரி முன்னணி பெற்ற 59514 வாக்குகளும் முக்கியமானவை. மேற்கு மாகாணத்தில் 15,500 வாக்காளர்களும், சப்ரகமுவ மாகாணத்தில் 13,196 வாக்காளர்களும், தென் மாகாணத்தில் 10,000 வாக்காளர்களும் இந்த முன்னணியை ஆதரித்து வாக்களித்திருப்பது குறிப்பிடத்தக்கது. சப்ரகமுவ மாகணத்தில் ஒரு ஆசனத்தையும் இந்த முன்னணி பெற்றுக் கொண்டது.

அது போலவே மலையகத்தில் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் மாயையிலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த மலைகத்தமிழர்கள் மத்தியில் மலையக மக்கள் முன்னனணி, அஸீஸ் காங்கிரஸ் ஆகியவற்றினைக் கொண்ட சுயேச்சைக் குழு(2)விற்கும் மக்கள் வாக்களித்துள்ளனர். மத்திய மாகாணத்தில் 15,700 வாக்குகளைப் பெற்ற இந்த முன்னணியில், சிறையிலிருக்கும் மலையக முன்னணித் தலைவர் சந்திரசேகரன் மத்திய மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

மலையக மக்களின் ஏக தலைவன் தனே என்று கொக்கரிக்கும் தொண்டமான், மலையக மக்களை ஐக்கிய தேசியக்கட்சிக்கு தரைவார்த்துக் கொடுக்கையில், அரசிற்குச் சாமரம் வீசும் ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய இயக்கங்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து தமிழ் மக்களைக் குழப்பிக் கொண்டிருந்த வேளையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது இடதுசாரி மக்கள் விடுதலை முன்னிக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தது வரவேற்கத்தக்கது.

இந்த நிகழ்வுகள் மூலம், முதலாளித்துவ சக்திகளுக்குப் பின்னும், சந்தர்ப்ப வாத ஸ்ரீலங்கா சுதந்திர --- இடதுசாரிக் கூட்டுக்களுக்குப் பின்னும் செல்லாது, ஒரு இடதுசாரி முன்னணியின் கீழ் வரக் கூடிய மக்கள் குழுக்கள் தம்மை இனம் காட்டியுள்ளன. மாவட்டங்கள் தோறும் சிதறியுள்ள நுற்றுக்கணக்கான -- ஆயிரக் கணக்கான இந்த மக்கள்தான் இடதுசாரி எதிர்ப்பு முன்னணியின் அஸ்திவாரமாக அமைகின்றனர். இந்த அஸ்திவாரங்களைப் பலப்படுத்துவதன் மூலமும் மக்கள் விடுதலை முன்னணியின் கோரிக்கைகளுக்கு மேலும் மக்கள் ஆதரவைப் பெறுவதன் மூலமுமே வருங்காலத்தில் ஒரு பலமான இடதுசாரி அரசியலை முன்னெடுக்க முடியும். ❑

## இலங்கையின் பொருளாதாரம் !

இலங்கையின் திறந்த பொருளாதாரம் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கின்றது என்பதை அரச அறிக்கைகளே தெளிவாக்குகின்றன.

இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கையை வலுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் அண்மையில் முதலீட்டாளர்களுக்கும் பணம்படைத்தவர்களுக்கும் பல்வேறு ஊக்குவிப்புக்களையும், சலுகைகளையும் அறிவித்தது. இவற்றுள் மிக முக்கியமானது இலங்கையில் இருந்து வெளிநாடு செல்லும் ஒருவர் 20 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரையிலான செலவாணியை பிரகடணப்படுத்தாமல் எடுத்துச் செல்லலாம் என்பதாகும். அத்துடன் சர்வதேச ரீதியில் பயன்படுத்தப்படும் சர்வதேச "விசா"வில் கடன் அட்டைகள் இலங்கையர் மத்தியில் இலங்கை வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வரையறைக்கு அப்பாற்பட்ட அன்னிய செலவாணியை வெளிநாட்டிற்கு யாரும் எடுத்துச் செல்லலாம். இவ்வாறு ஏழைத் தொழிலாளர்களின் உழைப்பினால் சேர்க்கப்படும் அன்னியச்செலவாணியை கொள்ளையடித்துப் போக வசதியளித்தும் கூட பொருளாதார வீழ்ச்சியே ஏற்பட்டுள்ளது.

இலங்கை எதிர்பார்த்த வகையில் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை காட்டத்தவறியுள்ளது என அண்மையில் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள 1992 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையின்படி, இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1991ஆம் ஆண்டைவிட 1992 ஆம் ஆண்டு 0.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

பொதுவான பொருளாதார வளர்ச்சி 4%மாக இருக்குமென எதிர்பார்த்த போதும் அது 3.6%மாக மட்டுமே இருந்துள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல பாரம்பரிய ஏற்றுமதிகளான தேயிலை, ரப்பர், தெங்கு போன்றவற்றின் ஏற்றுமதி வருமானம் 26%தால் வீழ்ச்சியடைந்துள்ளதென்றும் மேற்படி மத்தியவங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ❑

www.tamilarangam.net

# கிட்லர் : புதிய வாரிசுகளும் ஜேர்மனியும்.

கொலை, தீவைப்பு, குண்டுத்தாக்குதல், சட்ட மாற்றங்கள்; முன்னேறும் மனித சமூகத்திற்கு ஓங்கியறையும் சூழ்நிலை ஜேர்மனியில் !

------- ப.வி.சிறிரங்கன்.

இதோ, மனித வளர்ச்சியின் நகர்வுக்கு மீண்டும் ஒரு கரி பூசல். ஜேர்மனிய மண்ணில் பாசிசம் தலை விரிக்கோலமாய் அலைய படுகொலைகள் வெளிநாட்டாரை குறி வைத்து உயிர் குடிக்க ஜேர்மன் மண் மீண்டும் , கிட்லரின் நிழலில் இருள் சூழ்ந்து துயில்கிறது.

நேற்று ஓடியாடிய வெளிநாட்டவரின் மழலை நம் கண்ணெதிரே, இன்று சாம்பலாகிறது, ஜேர்மனிய நகரங்களில்.

வெளிநாட்டவருக்கு எதிரான இனவெறித்தாக்குதலின் உச்சக்கட்டம் அரசியல் கருத்தியல் கட்டுமானத்தின் உச்சக்கட்ட நிகழ்வுப்போக்காகுமா? நிச்சயமாக. கடந்த பத்தாண்டுகளாக ஜேர்மனிய ஆட்சியாளர்களின் வெளிநாட்டவர் மீதான எதிர்ப்புக் கருத்தியல் விதைப்பின் விளைபலன் இன்று அறுவடையாகிறது. இதற்கு எமது குருதியும்,தசையும் பசளையாகுமா? இன்று துருக்கியம் நாளை எவரெவரோ!

இன்றும் ஈழத்தின் வாழ்சூழல் பாதிப்பால் வறுத்தரைத்த மிளகாய்த் தூளும், திருநீற்றுப் பைக்கட்டுடனும் கொழும்பு .......... தாய்லாந்து ......... சிங்கப்பூர்............-மொஸ்கோ வரை தவிப்புடன் தவமிருக்கும் எம் உறவினர், நாளை ஐரோப்பிய நாடொன்றிக்கு வந்தடையும் கனவுடன்,

இதோ அவர்களுக்கு முன் வந்தடைந்த நாம், நடுக்கத்துடன் இரவு படுக்கையில் உயிர் பறிக்கப்படுமா? கேள்விக்குறியாக நமது உணர்வுகள் நீள அச்சத்தில் ஊசலாடும் வாழ்வாக எங்கள் மெய் வாழ்வு.

புலம் பெயர்ந்து வாழும் நமக்கு இருப்பிடம் ........ போக்கிடமில்லை. தாயகம் பறிபட்டுப்போக அனாதைகளாக ஐரோப்பியத் தெருவெங்கும் வெள்ளையர்களின் வெறுப்புக்காளாகி எச்சில் இலை சுமக்க போட்டியுடன் அல்லல் படும் நாங்கள்.

இந்த நமக்கு ஐரோப்பியா சொந்தமில்லை நமது வாழ்வு இங்கு பலவீனமானதே ! இதோ நமக்கு எதிரான பல காரணிகள் ஜேர்மனிய மண்ணில்:

மே .26 .1993:

ஜேர்மனியில் போலி ஜனநாயகம் புதைகுழிக்கு அனுப்பப்பட்ட நாள். மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்த நாள். ஆம் 1958ம் வருடம் ஜெனிவா ஒப்பந்தத்தின் பிரகாரம் ஜெர்மனிய அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட "அரசியல் தஞ்சவுரிமைச்சட்டம் 16 வது பிரிவு,, அகற்றப்பட்ட கொடுங்கரி நாள்.

இந்த சட்ட அகற்றலை அனைத்து செய்தி நிறுவனங்களும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் புதைகுழிக்கு அரசியல் தஞ்சஉரிமைச்சட்டம் 16 ஐ அனுப்பிவிட்டோம்,, என்று அறிவித்தார்கள். பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பெரும் பான்மை வாக்குப் பலத்தில் அச்சட்டம் அகற்ற முடிவெடுக்கப்பட்டது. ஆளும் CDU,CSU,FDP கூட்டரசுடன் எதிர்கட்சியான SPD யும் இவ்வகற்றல் வாக்கெடுப்புக்கு ஒத்து வாக்களித்துள்ளது. எனினும் நீடெர்செக்ஸ்சன் (Niedersachsen) பிறீமன்(Bremen) ஆகிய இரு ஜெர்மனிய மானிலங்கள் இச்சட்டமாற்றத்தை எதிர்த்துள்ள போதிலும் இவற்றைத் தமது மானிலங்களில் அமுலுக்குக் கொண்டு வர வேண்டிய நிலையிலேயே உள்ளன. நீடெர்செக்ஸன், பிறீமன் ஆகிய இரு மானிலங்களிலும் S.P.D Grün ( பசுமைக்கட்சி) கட்சிகளின் கூட்டரசு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதோ அரசியல்தஞ்சவுரிமைச்சட்டம் 16 ஐ மாற்றிய பின் மகிழ்ச்சி பொங்கும் சில பத்திரிகைகளின் கருத்து:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Asylanten- Stopp.

Der Bundestag beschliesst die Neuregelung des Asylrechts und des Artikels 16 im Grundgesetz. Damit werden Künftig Abschiebungen erleiehter Ausländer , die aus einem als sicher geltenden Drittstant (EG länder und Nachbar staaten ) kommen werden vom Asyl fahren aus geschlossen.Das Asylgegesetz tritt am 1 Juli un Kraft.
(Bildzeitung vom 30/31- Mai 1993)


அகதிகள் நிறுத்தம். சமஷ்டி பாராளுமன்றம் புதிய விதிமுறைகளுக்கமைய அரசியல் தஞ்சவுரிமைச் சட்டம் 16ஐ நீக்கியுள்ளது. அத்துடன் வருங்காலங்களின் அகதிகளை திருப்பியனுப்புவதற்கு, இலகுவாக காரியமாற்றியுள்ளது. வெளிநாட்டவர்கள் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளிருந்தும், அயல் நாடுகளிலிருந்தும் வருவதும், அரசிய தஞ்சம் கோருவதும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய சட்டங்கள் வரும் ஆடி 1ம் தேதி பலமாக அமுலுக்கு வரும்.
(" பில்ட் „ பத்திரிக்கை 30/31 மே 1993)

................Nach den ja des Bundesrates können die Neuregelung des Aslyrechts und die damit verbunderen verfahranregelungen sowie die Kürzung der sozialhilfe nun am 1 Juli dieses Jahres in Kraft treten.Für die Grundgesetzänderrung stimten im Bundesrat 51 Mitgelieder, fünf mehr als die erforderliche zwei dittel mehrheit.
(Nürnberger Zeitung 29 Mai 1993)

பாராளுமன்றம் இயலுமென்றதற்குப் பின், அரசியல் தஞ்சவுரிமைச்சட்டம் புதிய விதிகளுடன், பல்வகை அரசியல் தஞ்ச விதிகளுடனும் சமூக உதவி குறைப்புடனும் வரும் ஆடிமாதம் 1 ம் தேதி இறுக்கமான அமுலுக்கு வருகிறது. மூன்றில் இரண்டு பெரும் பான்மைக்கு 5 வாக்குகள் கூடிய நிலையில் 51 உறுப்பினர்களின் வாக்குகளுடன் புதிய அரசியல் தஞ்சவுரிமைச் சட்டத்திற்கு பெரும் பான்மை கிடைத்துள்ளது.
(நூரன்பேர்க் பத்திரிகை 29 மே 1993)

மேற்குறிக்கப்பட்ட செய்தியை ஒட்டியே பல பத்திரிக்கைகள் செய்தி வெளியிட்டுள்ளன சுட் டொச்ச சைற்றுங் (Süd Deutsche Zeitung) ஒரு படி சென்று ,dass nach dem Neuen Recht die Meisten Flüchlinge keine wieder sprung Möglichkeit mehr haben,wenn sie in die Nachbarländer züruckgeschoben werden ,,இப்படி எழுதுகிறது.இதன் அர்த்தம் யாதெனில் முக்கியமாக அகதிகள் மீள் பரிசீலனை செய்ய முடியாது புதிய விதிகளுக்குப் பின் அயல் நாடுகளிலிருந்து கூட இதைச் செய்ய முடியாது., என்பதாகும்.

ஆக மொத்தத்தில் "அனைத்து வகைகளிலும், மனிதவுரிமைக்கு சாவு மணி அடித்துள்ளார்கள். அனைத்து துறையிலும் அகதிச்சட்டவுரிமையை அழிதொழித்துபின் ஜேர்மனிக்குள் புதிய அகதிகள் வருவது முற்று முழுதாகத் தடுக்கப் பட்டுள்ளது.



மே. 29 1993:

நாசிகளின் கைகள் மீண்டும் உயிர் பறிப்புக்காக தாக்குதல் நடத்தி துருக்கியர்கள் ஐவரைக் கொலை செய்த நாள்;. சோலிங்கன் நகர், துருக்கிய மக்களின் குருதியால் சிவந்த நாள்; சோலிங்கன் நகர், துருக்கிய மனிதர்களின் உடல் கருக்கிய தீயின் ஜவாலையில் புகைபடிந்து மங்கிய நாள் !

இதோ, சோலிங்கன் அசம்பாவிதத்தை "பில்ட் சைற்றுங்" தலையங்கம் தீட்டுகிறது.:

"NAZI - ATTENTAT _ 5 TOTE !
WIEDER TÜRKISCHE KINDER VERBRANNT ! "
(Bild zeitung 30731 Mai)

நாசிகள் —— தாக்குதல் ?
ஐவர் சாவு ! மீண்டும் துருக்கிய மழலைகள் தீயில் கருகியன.
( பில்ட் சைற்றுங் 30/31 மே)

இதோ பில்ட் பேப்பரின் உள்ளடக்கம்

Diese tat erschüttert Deutschland, ensetzt die Welt für Turken starben bei einem grauenvollen Branddanschlag mitten in Solingen: drei kinder mit zwei Frauen. Die täter sucht die polizei in Neonazi Kreisen: Zeugen sahen vier Skinheads am tatort, die



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

zwei Frauen. Die täter sucht die polizei in Neonazi Kreisen: Zeugen sahen vier Skinheads am tatort, die polizei fahndet nach einen 15 jährigen Rechtsradikalen. Alles über die mordnacht.

"இத் திடுக்கிடும் நாடகம் ஜேர்மனியில்; உலகம் திகிலில். ஒரு பாரிய எரி குண்டுத் தாக்குதலால் சோலிங்கன் நகரில் துருக்கியர் ஐவர் மரணம். மூன்று மழலைகளும், இரு பெண்களும். காவல் துறையினர், புதிய நாசிகளின் வலயத்தில் இக்காரியத்தில் பங்கெடுத்தவர்களைத் தேடுகிறார்கள். பதினைந்து வயது மரபு வாதியின் கைதுக்குப் பின்னான சாட்சியத்தின்படி நான்கு "சிகின்கெட்ஸ்" இத்தாக்குதல் திகில் நாடகத்தில் பங்காற்றியுள்ளனர். இவை யாவும் ஒரே கொலை இரவிற்க்குள் நடந்தேறியுள்ளன..

( பில்ட் சைற்றுங் 30/31 மே 1995)

"15 வயது மரபு வாதி......................... ஜேர்மனிய செய்தி நிறுவனங்களும், சமூகவியல் பேராசிரியர்களும் "15 வயது சிறுவர்கள்" மரபு வாதிகளாகிவிட்டார்கள், அவர்கள் நாசிகளல்ல. ஏதோவொரு அவலத்தில் அகதிகள் மீதும், வெளி நாட்டவர்கள் மீதும் வெறுப்புற்றுள்ளார்கள். அவர்களின் வெறுப்புக்குப் பிரதான காரணம், அவர்களின் வேலை வாய்ப்பை வெளி நாட்டவர் அபகரித்தமை முதல் காரணம். இது போன்ற வேறு பல காரணங்களும் ஜேர்மனிய சிறார்களை வெளி நாட்டார் மீது வெறுப்புக் கொள்ள வைத்திருக்கிறது " என்று பிதற்றுகிறார்கள்.

இது எவ்வளவு தூரம் உண்மையைக் கொண்டுள்ளது ?
ஒரு பகுதியுண்மையைக் கூட இது பெற்றிருக்கவில்லை.

"பதினைந்து வயது மரபு வாதி " என்பது தப்பித்துக் கொள்வதற்கான சொற்றொடரே!

ஜேர்மனியில் பெருகி வரும் புதிய நாசிக் கூட்டமும், வக்கொழிந்த கொலை வெறியூட்டும் அரசியல் கருத்துத் தளமும், இவற்றை ஸ்தாபனமாக்க விரும்பும் பிற்போக்கு அரசியல் கட்சிகளும், கொலை வெறித்தாக்குதல்களை மிகவும், நிதானமாக செய்து முடிக்கிறார்கள். இவர்களுக்கிருக்கிற ஒரே பிரச்சனை சட்ட பூர்வமான சில ஜனநாயக விழுமியங்களே. இவற்றிலிருந்து தப்பிக்கவும், சட்ட வாதப் பிரச்சனைகளை முறியடிக்கவும் ஜேர்மனிய நாசிக் கட்சிகள், இரகசியமாக 15 வயது, 16 வயது சிறார்களின் பின் ஒளிந்து கொள்கிறார்கள். சிறார்களைத் தமது தேவைக்கேற்றபடி ஆக்கிப் பயன் படுத்துகிறார்கள்.

இவ்வுண்மையை இங்கிருந்து வெளியாகும் சகல ஜேர்மன் பத்திரிகைகளும் ( வலதுசாரி கருத்தியல் செய்தித்தாள்கள்) திரை போட்டு மறைக்க முனைகிறார்கள். இதற்கு ஜேர்மனிய வலதுசாரி அறிவு ஜீவிக்கூட்டமும் உடந்தையாகச் செயல்படுகிறது!

இன்று துருக்கியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இக்கோர அராஜகத்தை துருக்கிய அரசே கண்டிக்க முடியாது தடுமாறி கதிகலங்கிப் போயுள்ளது.

நாசிகளின் கட்டுமிராண்டித்தனத்தை துருக்கிய நாடு கண்டிக்கும் தார்மிக பலத்தையிழந்து நிற்கிறது. ஆம்! துருக்கிய நாடு குருடிஸ்த்தான் மக்களின் சுயநிர்ணயவுரிமைக்கான போரை நசுக்கி - ஒடுக்கி வரும் போது, தன் மக்களுக்கு ஜேர்மனியில் நிகழும் ஒடுக்குமுறையை கண்டிக்கும் அருகதையில்லை. எனவேதாம், ஜேர்மனிக்கான துருக்கிய தூதுவர் டாக்டர். ஊனுர் உய்மென் (Onur Oymen) சொல்கிறார் கீழ் வருமாறு, "துருக்கிய ஜேர்மனிய உறவுகளானது மிகவும் இறுக்கமானது; அது மிகவும் புரிந்துணர்வு மிக்கது. துருக்கியர் மீதான இத்தாக்குதல்களால் எங்கள் உறவுக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. மற்றும்படி உறவுக்கு பிணக்கெதுவுமில்லை. மரபுவாத சில இளைஞர்கள் துருக்கியர் மீது வெறுப்புற்றுள்ளதுதான் இத்தகைய செயல்களுக்குக் காரணம். எனினும், இத்தகைய நடவடிக்கைகள் இனிமேற் தொடராதிருக்கும் என்று நம்புகிறேன். காரணம், திரு.கோல் அவர்கள், எனக்கு உறுதியளித்துள்ளார்." துருக்கிய தூதர் இதைவிட வேறு விஷேசமாக பேசிவிட முடியாதுதாம்.

இவருடைய பேச்சாலும், துருக்கிய பாராளுமன்றம் விசாரணைக் கமிஷன் நிறுவி ஒரு சில அதிகாரிகளை ஜேர்மனுக்கு அனுப்பி உல்லாசமாக சுற்றிவர ஆணையிட்டதாலும், ஜேர்மனியில் வாழும் துருக்கியர்கள் ஆவேசப் பட்டார்கள். தங்கள் இன்னல்களுக்கு ஒழுங்காக நடவடிக்கை எதுவும் செய்யாது தப்பித்த துருக்கிய அரச உறுப்பினர்களில் ஆத்திரப்பட்டார்கள். இதன் விளைவாக:

அகால மரணமுற்றவர்களின் இறுதிச்சடங்கில் உரையாற்றிய பாராளுமன்ற உதவித் தலைவர் டாக்டர் யில்டிறிம் அவிசி ( YIldIrIm AvcI), மற்றும் துருக்கிய அரச பேச்சாளரும், உள்நாட்டு அமைச்சருமான அக்கின் கொயனன் (Akin Gönen) ஆகியோர்கள் தொடர்ந்து பேச முடியாதபடி துருக்கிய மக்களால் தடுத்து அனுப்பப்பட்டார்கள்.

என்னதாம் செய்தாலும், அராஜகத்திற்கு அராஜகம் என்ற பதிலால் துருக்கிய முஸ்லீம் அடிப்படை வாத இளைஞர்கள் பலர் பேச வெளிக்கிட்டதால் ( எதிர் தாக்குதல் ----- அராஜக செயற்பாடுகள் ) அனுதாபங் கொண்டு துருக்கியருக்காகக் குரல் கொடுத்த ஜேர்மனிய மக்களும், வெளிநாட்டு ஆலோசனை அமைப்பும் துருக்கியரின் ஆர்ப்பாட்டங்களிலிருந்து கூடியவரை விலகி நிற்கிறார்கள்.

இது, துருக்கிய மக்களின் நியாயமான போராட்டத்திற்கும், உரிமைக்கும் மிகப் பெரிய தோல்வியே.

இறுதியாகச் சில கருத்துக்கள்.

ஜேர்மனியில் ஆங்காங்கே பல நகரங்களில் துருக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிமனைகளும், உணவு விடுதிகளும் தாக்கப்படுகின்றன. துருக்கியர்களின் எதிர் நடவடிக்கைகளால் ஆத்திரம் கொண்ட ஜேர்மனிய இளைஞர்கள் நாசியத்தைக் கடந்து செயல்களில் இறங்கியுள்ளதாக "முன்ஸ்ரர்" நகர் சமூகவியல் பேராசிரியர் ஒருவர் தொலைக்காட்சியில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சோலிங்கன் நடவடிக்கைக்குப் பின்னும், துருக்கியர்களின் எதிர்த் தாக்குதல்களுக்குப் பின்பும், நாசிக் கட்சிகள் பல உயிரும் உரமும் பெற்று செயற்படுகின்றன.

ஒவ்வொரு சனசந்தடி மிக்க இடங்களிலும், பேருந்து தரிப்பு நிலையம், புகையிரத நிலையம் போன்ற இடங்களிலும் "ஸ்ரிக்கர் போராட்டம்" மும்முரமாக நடக்கிறது.

இளைஞர் ------ தேசிய ஜனநாயகம் ( Junge --- National Demokratie) எனும் நாசிக்கட்சி வன்மையாகத் தாக்குதல் போராட்டம் செய்கிறது. அதன் "ஸ்டிக்கர்" கருத்துக்களில் சில வருமாறு :----

"Einwanderung ist Landraub" ( குடியேறல் தேசத் திருட்டு)

"Kämpft mit uns für Deutschland, gegen Scheinasylantentum und über Fremdung" (ஜேர்மனிக்காகப் போர் செய்வோம், "வவுச்சர்"அகதிகளையும், அந்நியர்களையும் எதிர்ப்போம்.)

"Keine Steurgeld für Linksradikals und Asozials" ( இடதுசாரி மரபுவாதிகளுக்கும், கண்ணியமற்ற சமூக பிரிவுக்கும் வரிப்பணமில்லை)

"Umweltschutz ist Heimatschutz) (சூழல் பாதுகாப்பு தாயகப் பாதுகாப்பு)

இது போல் இன்னும் பல "ஸ்டிக்கர்"களாக கண்களில் பட்டு வெறியூட்டுகின்றன. இளைஞர் தேசிய ஜனநாயகத்தின் ( Junge ---- National Demokratie) உள்ளடக்கம் விசாலமானது. அது, தனியே வெளி நாட்டவர் எதிர்ப்பைக் கொண்டிருக்காமல் சூழல் பாதுகாப்பு, வரிப்பணப் பாதுகாப்பு, கொம்யூனிச எதிர்ப்பு என்று பல தளங்களில் மாய்மாலம் செய்கிறது.

அது, ஒரு வகையில் கிட்லரின் போக்குடன் அண்மித்தே செல்கிறது.

இவ்வித அரசியல் நிகழ்வுக்குள்ளும், வன்முறைக்குள்ளும் வாழும் சகல வெளி நாட்டு அகதிகளும், குடியேற்றக் குடிகளும் ஜேர்மனியத்தின் புதிய வகை யூதர்களாக கணிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு நச்சு வாயும், விஷ ஊசியும் மிக விரைவில் பரிசாகக் கொடுக்கத் துடிக்கிறார்கள், நாசிக்கட்சிகள் என்பதே யதார்த்தம்; தீயும், ஜுவாலையும் தான் ஜேர்மனியின் இன்றைய யதார்த்தம் என்கிறார் துருக்கிய எழுத்தாளர் திரு. சாவர் செனொக் (Zafer Senocak) .

ஆக மொத்தத்தில் நாம் கொலைஞர்களின் வலுக்கரங்களுக்குள் ஜீவிக்கின்றோம் என்பதை உணர்கிறோம். அக் கொலைஞர்களின் கரங்கள் சட்ட மாற்றங்களாகவும், குண்டுத்தாக்குதல்கள் ஆகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்காக எமது உயிரைக் கொடுப்போமா அல்லது எதிர்த்து மனித இருப்பிற்காகப் போராடுவோமா என்பதை தீர்மானிக்க வேண்டிய வேளை நெருங்கிவிட்டது. ❑





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு சர்வதிகாரியின் மரணம்

*வி.திருநாவுக்கரசு*

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா 01.05.93 மேதின ஊர்வலத்தில் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார். தென் ஆசியப் பிரதேசத்தில் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையாக விளங்கியவர் அவர். மக்களை ஏமாற்றுவதில் கைதேர்ந்தவரான அவர் ஒரு புறத்தில் (மக்களுக்கு) தான் கடன் பெறும் எவரின் நிபந்தனைகளுக்கும் பணியமாட்டேன் என்று வீரப்புப் பேசிக் கொண்டு மறுபுறத்தில் சர்வதேச நாணய நிதியம் / உலக வங்கி ஆகியவற்றின் ஒவ்வொரு நிபந்தனையையும் நிறைவேற்றிக் கொண்டிருந்தார் ; மக்களை ஏமாற்ற "மக்கள் மயம்" என்று சொல்லிக் கொண்டு அரச உடமைகளை தனியார் மயமாக்கினார்.

1980 ஜலை மாதம் சம்பள உயர்வு கோரி பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட 100,000 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் அப்பொழுது பிரதம மந்திரியாக இருந்த பிரேமதாசாவேதான். வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்தனர். சிலர் தற்கொலை செய்து கொண்டனர்.

1977 இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தினால் அமுல் நடத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையினால் பெருகிய இறக்குமதிகள் உள்நாட்டு உற்பத்திகளைப் பெருமளவில் பாதித்தது. பதிவிக்கு வந்த இந்த அரசாங்கம் இலங்கை நாணயத்தின் மதிப்பை 100%த்தினால் குறைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வருவதற்கு முன்பு ( 1977ல்) us$ 1 = Rs. 8/ = க்குச் சமனாக இருந்தது. தற்பொழுது uS$1 = Rs.46/= ஆக உள்ளது. ஆனால் சமீப காலத்தில் இலங்கை நாணயம் உலக நாணயங்களுடன் சமனாக வரும் எனப் பிரேமதாசா பிதற்றித் திரிந்தது வேடிக்கையாகவே இருந்தது.

உள்நாட்டு உற்பத்தியின் வீழ்ச்சியினால் வேலையில்லாமை அதிகரித்ததுடன் மக்களின் வருவாய்களும் குறைந்தன. ஸ்ரீலங்காவின் தென் பகுதிகளில் வேலையில்லாமையினாலும் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமையாலும் விவசாயிகள் ஆத்திரமடைந்திருந்தனர். பழைய இடதுசாரித்தலைமைகள் முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து விட்டதால் ஆத்திரமடைந்த மக்கள் ஜனதா விமுக்திப் பெரமுன ( ஜே.வி.பி )யை தமது அரசியலை முன்னெடுக்கும் இயக்கமாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் 1989/90களில் ஜனதா விமுக்திப் பெரமுன கையாண்ட முனநோக்கற்ற தந்திரோபாயங்கள் பிரேமதாசாவின் அரசாங்கத்திற்கு இரத்த வெறியாட்டம் ஒன்றை நடத்த சந்தர்ப்பம் அளித்தது. 60,000 சிங்கள இளைஞர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

1950களிலிருந்து தீர்க்கப்படாத தேசிய இனப்பிரச்சனையினால் உருவாகிய யுத்தம் ஸ்ரீலங்காவின் வடகிழக்கில் முடிவில்லாத போராக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பிரேமதாசா கொலை செய்யப்பட்டதை அடுத்துச் சில இடங்களில் பட்டாசுகள் கொளுத்திக் கொண்டாடப்பட்ட போதும் சில தேசிய மற்றும் வெளிநாட்டு தொடர்பு ஸ்தாபனங்கள், ஏழையாகப் பிறந்து உயர் பதவியை அடைந்த பிரேமதாசாவை ஒரு வீரனாகவும் ஏழைகளின் நண்பனாகவும் காட்ட முற்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் அவர் ஒரு சர்வதிகார ஜனாதிபதியாகவே செயற்பட்டார்- அவருடைய செயலகம் மந்திரி சபைக்கு மேல் ஆதிக்கம் செலுத்தியது. முன்னைய மந்திரி சபை அங்கத்தவரும் , ஒரு வாரத்திற்கு முன்பாகச் சுட்டுக் கொல்லப்பட்ட லலித் அத்துலத்முதலி அவரை "தனிக்காட்டு ராஜா" என்று வர்ணித்தார். லலித் அத்துலத் முதலியினால் முன்னெடுக்கப்பட்ட ஒழுக்கவுழுவுரை மசோதாவினால் தனக்கு ஆபத்து நெருங்கிறதை அறிந்த பிரேமதாசா கீழ் இறங்கி வந்து, தான் ஒரு சாதாரண மனிதன் என்றும் தன்னுடைய கழுத்தை பணம் படைத்தவர்கள் வெட்டப்பார்க்கிறார்கள் எனறு ஒப்பாரி பாடினார். ஆனால் மற்றவிடங்களில் அவர் சாதாரண மனிதனாக நடந்து கொள்ளவில்லை. ஏகாதிபத்திய வாதிகளின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் - தனியார் மயப்படுத்துவதில், சமூகநலத்திட்டங்களை இல்லாமல் செய்வதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாகுமுதலாளித்துவத் தலைவர்களான ஜே.ஆர். ஜயவர்த்தனா, லலித் அத்துலத் முதலி ஆகியோரை விடத் தி றம்படச் செய்ய முடியுமெனச் செய்து காட்டினார்.

பிரேமதாசாவினுடைய பொருளாதாரக் கொள்கைகளும் , விரைவான தனியார் மயப்படுத்தலும், வெளிநாட்டு வியாபாரத்திற்கான கட்டுப்பாட்டுத் தளரத்தல்களும் ஆசியாவிலேயே சிறந்தவையென வர்த்தக் சமூகத்தினர்களினால் பாரட்டப்பட்டுள்ளது. ( பினான்சல் ரைம்ஸ் 04.05.1993) இதன் விளைவுகள்; அதிகரித்த வேலையில்லாமை, குறைந்த கூலிகள், தாழ்ந்த வாழ்க்கைதரம் ஆகின்றது. 1991 UNICEF இன் அறிக்கை இதற்குச் சான்று பகருகின்றது : --

" ஸ்ரீலங்காவின் இன்றைய நிலமைகளில் அதிகம் பாதிப்புக்குள்ளாயிருப்பவர்கள் ஏழைகளேயாகும். போஷாக்கின்மையினால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது கர்பிணிப்பிணிகள், பிள்ளைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரைப் பெரிதும் பாதிக்கின்றது. போஷாகற்றவர்களை தொற்று நோய்கள் பெரிதும் பாதிக்கின்றன. இவர்களுக்கு அவசியமான வைத்திய வசதிகள் இல்லாமை நிலமைகளை மேலும் மோசமாக்கியுள்ளது."

தனியார்மயப்படுத்தும் திட்டத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், ஸ்ரீலங்காவில் சமூக அடித்தளத்தில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள்தான். அவர்கள் வேலை செய்யும் நாட்களின் எண்ணிக்கையும், வேதனமும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. சுமார் 500,000 தொழிலாளர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களிடம் போஷக்கின்மை என்றுமே ஒரு பிரச்சனையாக இருந்து வந்தது. தற்பொழுது தனியார்மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தினாலும் அதைத் தொடர்ந்த சமூகநல சேவைகளின் குறைப்புகளினாலும் பாதிப்புகள் அதிகரித்துள்ளன.

வடக்கு - கிழக்கில் யுத்தம் நடை பெற்ற பொழுதிலும், தேசிய உற்பத்தி 4.8%த்தினால் அதிகரித்ததாக பிரேமதாசா புழுகுகள் சொன்னார். ஆனால் இந்த வளர்ச்சி நாட்டின் 70%மான மக்களுக்கு எந்தவிதமான நன்மையையும் கொடுக்கவில்லை. நாடு இன்று 5000 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் பழுவினால் தவித்துக் கொண்டிருக்கின்றது. 1978 இல் இந்தக கடன் 248 மில்லியனாக இருந்தது.

தமிழர் தேசிய இனப்பிரச்சனையில் பிரேமதாசா கையாண்ட நழுவல் போக்குகள் 10 வருட யுத்தத்தை இன்று LTTE க்கும் அரசுக்குமிடையிலான கொடும் போராக மாற்றியுள்ளது. விமானக் குண்டு வீச்சினால் வைத்தியசாலைகள் (ஹிட்லர் கூட இப்படிச் செய்யவில்லையாம்), பள்ளிக்கூடங்கள், அகதி முகாம்கள், வணக்கஸ்தலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் போர் இன்று



25 பில்லியன் ரூபாய்களை வருடமொன்றிற்கு விழுங்குகின்றது. வடக்கிலும் கிழக்கிலும் 50,000க்கும் மேலானோர் இறந்துள்ளனர், ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகியுள்ளனர். பாரியளவில் சொத்துக்கள் அழிக்கப்பட்டுளது.

700,000 மக்கள் அகதி முகாம்களில் சீரழிகின்றனர். அவர்களுக்கு நாளொன்றிற்கு ரூபா. 9/= மதிப்புள்ள உணவுப் பொருட்கள் கொடுக்கப் படுகின்றன. (UNICEF அறிக்கை 1991) வீடுகளில் வசிக்கும் மக்களின் நிலமைகளும் இப்படித்தான் இருக்கின்றன. எல்லாவித பொருளாதார நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமுற்ற நிலையில் , உணவு, எரிபொருள், மருந்து வகைகள் இல்லாமை - ஒரு பொருளாதாரத்தடை - இதற்குக் காரணமாக உள்ளது. இவற்றுடன் வடக்கிற்கு மூன்று வருடங்களுக்கு மேலாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்தொகையின் அடிப்படையில், தனியார் மயப்படுத்தலின் தலைவன் பிரேமதாசா ஏழைகளின் நண்பனாக இருக்க முடியாது. அவருடைய வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மக்களிடமிருந்த உணவு முத்திரைகளைக் கூடப் பறித்தெடுத்து விட்டன. அவரை ஏழைகளின் எதிரி . ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளை என்றுதான் குறிப்பிடலாம்.

பிரேமதாசா தனது எதிரிகளை அடக்குவதற்கு எந்தவிதமான அரச ஒடுக்குமுறைகளையும் பயங்கரவாதத்தையும் பாவித்தாரோ அதே விதமான நடவடிக்கைக்கு அவர் பலியானார். அதனால் பயங்கரவாத அரசியலை நடத்தும் ஒவ்வொருவருக்கும் இது முக்கியமான பாடமாக அமைய அறுண்டும். "சோசலிசத்திற்கு மாற்றாக இருப்பது காட்டுமிராண்டித்தனம்தான்" என்று மார்க்சும் ஏங்கல்சும் எழுதிய வாசகம் அர்த்தம் பொதிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச்சந்திப்பு

**15**

**பேர்லின்**

1989ல் ஆறாவது இலக்கியச்சந்திப்பு பேர்லினில் நடைபெற்ற பின்பு 15வது இலக்கியச்சந்திப்பு 10 -11 ஏப்ரல் 1993 ல் மீண்டும் அங்கு நடைபெற்றது. ஆறாவது இல்க்கியச்சந்திப்பில் காணப்பட்ட ஆரம்பப் பிரச்சனைகள், தடுமாற்றங்கள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு அனுபவ ரீதியாக வளர்ச்சியடைந்த ஒரு சந்திப்பாக இது இருந்த போதிலும் வளர்ச்சிக்கு இன்னும் இடமுண்டு என்பதைப் பல நிகழ்வுகள் காட்டின. வளர்ச்சியும் மாற்றமும் முடிவில்லாது தொடர்பவைதானே.

முதல் நாள் நிகழ்ச்சி 10ம் திகதி சனிக்கிழமை சுசீந்திரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது. "இந்த இலக்கியச் சந்திப்பானது பல்வேறு அனுபவங்களையும் பல் வேறு விமர்சனங்களையும் தன்னகத்தே உள்வாங்கி வளர்ந்து வத்துள்ளது" என அவர் குறிப்பிட்டார்.

இலக்கியச்சந்திப்புக்கு வருகை தந்திருந்தவர்கள் தம்மை அறிமுகம் செய்த பின்பு வாசகர்களின் விமர்சன நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

"சக்தி" யில் வெளி வந்த "கற்பு நெறியென்று சொல்ல வந்தால் ..................." என்ற கட்டுரை மீது பலரின் விமர்சனங்கள் வைக்கப்பட்டன. அக்கட்டுரையில் " ஒழுக்க நெறி .....சாஸ்திரங்கள் ...கலாச்சாரங்கள்........." என்ற பதங்கள் எதனைக் குறிப்பிடப்படுகிறன என உமா வினாவினார். இக்கட்டுரை பற்றி நிருபா, லக்ஷ்மி ஆகியோரும் விமர்சனங்களை வைத்தனர். "பெண்ணிநிலைவாதம், பெண்கள் விடுதலை பற்றி எழுதும் சக்தி, எந்த விதமான விதமான விமர்சனமும் இல்லாமல் எப்படி இந்தக் கட்டுரையைப் பிரசுரித்தது" எனக் கேள்வி எழுப்பினார் லக்ஷ்மி. அதே பத்திரிகையில் கலைச்செல்வன் எழுதிய "காற்றில் ஏறி................" என்ற சிறு கதையும் விமர்சிக்கப்பட்டது.

பத்திரிகையாளர்கள் சோர்வுறக் கூடாது என்ற கருத்தைக் கூறிய மு.நித்தியானன்தன் , " ........ பத்திரிகை வெளியிடுவது என்பது லேசான சம்சாரம் அல்ல. ...........கனடாவில் டி.பி.எஸ்.ஜயராஜ் பத்திரிகை நடத்தியதால் அடிவாங்கியுள்ளார்...........றிச்சாட் டி சொயசா கொலை செய்யப்பட்டார்............இந்தப் பத்திரிகைகள் காலத்தின் பதிவுகள்......... பார்த்திபனின் கனவை மிதித்தவன் ........ தமிழர்களின் புகலிட வாழ்வின் குறிப்புக்களாக அவையெலாம்........." என்றார்.

"அ,ஆ,இ" பத்திரிகையில் பாரிஸ் இலக்கியச்சந்திப்புப் பற்றி எழுதிய குறிப்பு விமர்சிக்கப்பட்ட பொழுது இலக்கியச்சந்திப்புப்பற்றியும் அதில் கலந்து கொண்டவர்கள் மீதும் வைக்கப்பட்ட அசிங்கமான விமர்சனங்களுக்குப் பதிலளிக்கு முகமாகவே "சந்திரனைப் பார்த்து ......................." என்ற வாசகம் பாவிக்கப்பட்டது என்று கூறினார் அ.ஆ.இ. ஆசிரியர் குழுவிலுள்ள சார்ள்ஸ்.

வாசகர் விமர்சனத்தின் போது நிகழ்ச்சியில் தொய்வு ஏற்பட்டது போல தோன்றியது தவிர்க்க முடியாதது என்றே சொல்ல வேண்டும். இலக்கியச்சந்திப்புக்ளுக்கு இரண்டு வகையினர் சமூகம் கொடுக்கின்றார்கள். ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகளை வாசிப்பதுடன் இலக்கியச்சந்திப்புக்களுக்கு வழமையாக சமூகம் கொடுப்பவர்கள். இலக்கியச்சந்திப்பு நடைபெறும் நகரத்திலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் முதன் முறையாக இலக்கியச்சந்திப்புக்கு சமூகம் கொடுப்பவர்கள். இந்த இரண்டாவது வகையினருக்கு ஐரோப்பிய சஞ்சிகைகளில் வெளிவரும் ஆக்கங்கள், அவற்றிற்கான விமர்சனங்கள், கடந்த கால இலக்கியச்சந்திப்புக்கள் பற்றிய விவாதங்கள் ஆகியவை அன்னியமானவையாக இருக்கின்றன. அதனால் அவர்களின் பங்களிப்புகளும் குறைவாகவே இருக்கின்றன. இது இந்த நிகழ்ச்சியின் தொய்வுக்குக் காரணமாக இருக்கலாம். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியச்சந்திப்பில் தொடர்ச்சியாகப் பங்குகொள்பவர்களுக்கும் ஐரோப்பிய சஞ்சிகை வாசகர்கள் மற்றும் ஆக்கதாரர்களுக்கும் இவை முக்கியமானவையாகவே இருக்கின்றன.

வாசகர் விமர்சனத்தைத் தொடர்ந்து சுசீந்திரன் மூன்று நவடிக்கைககுழுக்களை அறிமுகம் செய்து வைத்தார்.

அ) ஐரோப்பாவில் நடவடிக்கைகள்,

ஆ) இலங்கை, இந்தியாவுடன் தொடர்பு ஏற்படுத்தி நடவடிக்கைகள் எடுப்பது,

இ) வெகுஜனத்தொடர்பு;

ஆகிய விடயங்களுக்குக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

அடுத்த நிகழ்சியாக சிறுகதை வாசிப்பும் விமர்சனமும் நடைபெற்றன.

கலாமோகன் எழுதிய "மழை" என்ற சிறுகதையை சுசீந்திரன் வாசித்தார். லியோன் :பாட்வாங்கர் எழுதிய "சர்வதிகாரியின் மூளை" என்னும் சிறுகதையை உமா வாசித்தார். சிறுகதைகளுக்கான விமர்சனத்தை அடுத்து பீலபீல்ட் "கொஞ்சப்பேர்" நாடகக்குழுவினரின் "ராமன் எத்தனை ராமனடி" என்ற நாடகமும் அதற்கான விமர்சனமும் நடைபெற்றது. முழுவதும் நீதிமன்ற விசாரணையாகவே நடைபெற்ற இந்த நாடகம் சிந்தனையைத் துண்டுவதாக அமைந்திருந்தது. நீதிமன்றத்தில் நடைபெற்றது இரட்டைக் கொலைவழக்கு. இரமன் சீதையையும் வாலியையும் கொலை செய்ததற்காக நீதி மன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தான். வசிட்ட முனிவர், தேரோட்டி ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். சட்டவிசாரணைக்குட்படுத்தப்பட்ட ஒரு பழங்கதை சமகால அரசியலை அலசியது. ஆயுதக்கலாசாரம், பெண் ஒடுக்குமுறை ஆகியவை விசாரணைக்குட்படுத்தப்பட்டன. சகலரையும் கவர்ந்த நிகழ்ச்சியாக இது அமைந்திருந்தது.

இரண்டாவது நாள், ஞாயிறு காலை நிகழ்ச்சி "சர்வதிகாரியின் மூளை" என்ற கதையின் விமர்சனத்துடன் ஆரம்பமாகியது.

இதைத் தொடர்ந்து "சமூகமாற்றத்திற்கான சிந்தனைகள் " என்ற கலந்துரையாடலை பாரதிதாசன் ஆரம்பித்து வைத்தார். பாரதிதாசனின் உதாரணங்களுடன் கூடிய பேச்சு பலவகையான விவாதங்களுக்கு வித்திட்டது. ஐரோப்பா மற்றும் வள்ர்முக நாடுகளில் ஏற்படும் மாற்றங்கள், இவற்றை விளக்கும் சித்தாந்தங்கள், மார்கசியம் அதன் மூலவர்களின் கருத்துக்கள் ................ எல்லாம் விவாத விடயங்களாகின. இந்தக் கலந்துரையாடலின் போது ஒரு அரசியல் கருத்தரங்கின் சூழலை உருவாக்கியது. பிற்பகல் நிகழ்ச்சிகள் இலக்கிய சூழலை ஏற்படுத்தின.

லோகநாயகியின் தலைமையில் புத்தக அறிமுகங்கள் நடை பெற்றன. கோசல்யா சொர்ணலிங்கம் எழுதிய "கோசல்யா கவிதைகள்", புகலிடப் பெண்களின் கவிதைத் தொகுப்பான "மறையாத மறுபாதி", கலாமோகனின் சிறுகதைத் தொகுதியான "குளிர்", கே.பி.அரவிந்தனின் கவிதைத் தொகுப்பு "முகம் கொள்" ஆகியவை ரஜீன்குமார், ஜசிந்தா, கருணாகரமூர்த்தி, கலைச்செல்வன் ஆகியோரினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

ரஜீன்குமாரின் "கோசல்யா கவிதைகள்" அறிமுகம், ஒரு விமர்சனமாகவே அமைந்திருந்தது. ரஜீன்குமாரின் விமர்சனம் -- அவர் குறிப்பிட்டபடி "சப்புடு பாணி"யிலேயே -- காரசாரமாக இருந்தது. இந்தக் கவிதைத் தொகுப்பில் காணப்பட்ட குறைகளைக் கூறிய அளவிற்கு அதில் காணப்பட்ட சில குணங்களைக் கூறாது விடுவிட்டார். புலம் பெயர்ந்த ஒரு படைப்பாளியை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இந்த நுல் வெளியீட்டாளரினால் வெளியிடப்பட்டது. அந்தப்பார்வையிலும் அறிமுகம் செயதவர் இந்த நுலை நோக்கியிருக்கலாம். புலம் பெயர்ந்த இந்தப்படைப்புக்கள் - காலத்தின் பதிவுகள் -- வருங்காலத்திற்கு ஒரு சாட்சியங்கள். மறுபுறத்தில் எழுதியவை எல்லாம் "அச்சா, அச்சா" என்று புகழப்பட வேண்டுமென்றும் எழுதியவர்கள் எதிர்பார்க்கக் கூடாது. விமர்சனங்களை எதிர் கொள்ளும் மனப்பக்குவத்தையும் அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

"மறையாத மறுபாதி" கவிதைத் தொகுப்பை அறிமுகம் செய்து வைத்த ஜசிந்தா விளக்கங்களுடனும் உதாரணங்களுடனும் அறிமுகத்தினைச் செய்து வைத்தார். இந்த அறிமுகம் "சப்புடு" பாணிக்கு எதிரிடையாக இருந்தது. எல்லோரையும் சந்தோஷப்படுத்தும் விடயங்கள் எளிதில் மறந்தும் விடுகினறன!

ஜேர்மனியில் குளிரை அறிமுகப்படுத்துவதும் கலாமோகனை அறிமுகப்படுத்துவதும் ஒன்றுதான். ஆனால் அவரின் "குளிர்" சிறுகதைத் தொகுப்பு இன்னும் வெளிவராததால் கருணாகரமூர்த்தியின் அறிமுக உரையை பலரும் ஆவலோடு செவிமடுத்தனர். ஒரு எழுத்தாளன் தன்னுடைய எழுத்துக்கள் மூலமாகத் தன்னை வெளிப்படுத்துகின்றான், அதன் பின்பே சமூகம், மற்றயவை பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துகிறான் என்பதை கலாமோகனின் கதைகளிலிருந்து உதாரணங்களுடன் எடுத்துக் காட்டினார். எந்த ஒரு தொழில் செய்பவனுக்கும் ஒரு தொழில் நுட்பம் இருக்கும், அதே போலவே கதை எழுதும் எழுத்தாளனுக்கும்.... கலாமோகனுடைய நடை தமிழுக்குப் புதிது -- 1936 இல் மணிக் கொடி காலத்தில் மௌனி என்ற எழுத்தாளர் இவ்வாறான பரிசோதனைகளை நடத்தினார் என்று அவர் குறிப்பிட்டார். கதைச்சுருக்கங்களுடன், சொற்பிரயோகங்கள், உத்திகள் ஆகியவற்றை விளக்கினார். நீண்ட உரையாகினும் அவர் மூலம் "குளிரை வாழமுடிந்தது".

கி.பி.அரவிந்தனின் கவிதைத்தொகுப்பை கலைச்செல்வன் சுருக்கமாகவே அறிமுகப்படுத்தினார். ஐரோப்பாவில் வாழ்ந்து கொண்டு

( 20 ஆம் பக்கம் பார்க்க )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# கேள்விகள் உருவாகின்றன

— நந்தி

மினிவான் யாழ்ப்பாண ஆரியகுளத்துச் சந்திக்கு வந்த போது, ஒரு பையன் ஓடி வந்து தொத்தி அதில் ஏறி, சிவப்பிரகாசம் மாஸ்ரருக்குப் பக்கத்தில் அமர்ந்தான். அவன் இராப்பயணம் செய்தவன் போல, கண்கள் சிவந்து பொருமினதாகவும் முகம் ரோமமும் எண்ணெயுமாகவும் தோன்றினான். ஏதோ நோக்கம் நிறைந்த அவன் பார்வையும், அப்பி வைத்தது போன்ற கொழுத்த மூக்கும், காத்திரமான மீசையும் அவன் இளமைக்குத் தீவிரம் தீட்ட, மாஸ்ரர் அவனைச் செவ்வையாகவும் சாடையாகவும் பார்த்துப் பார்த்து விகற்பமான பலவித யோசனைகளால் மனம் சோரலானார். அவன் தனது முழம் கால்களில் சிவப்புக் கோடுகளிட்ட ஒரு வெள்ளைக் கன்வஸ் பையை இருத்திக் கெட்டியாகப் பிடித்திருந்தான்.

"அத்றுக்குள் என்ன வைத்திருக்கிறானோ மாபாவி ? நேரம் பிசகிய வேளையில் அந்தச் சிறுபைக்கருவி பஸ்ஸைப் போர் தேங்காயெனச் சிதறடித்து, என்னையும் மற்றப் பிரயாணிகளையும் பிண்டம் துண்டுகளாக அகாலமாக ........ படைத்தவன் மடியில்——

வீரமாகாளி அம்மன் கோவில் வாசல் முன் இந்த வான் தரித்தது; கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த விதமான கதைதான். சிவப்பிரகாசம் மாஸ்ரர் வணக்கத்துடன் சால்வையை விலக்கி, பவித்திரமாக இதய பீடத்தைத் தொட்டு, உணர்விழந்த குரலில் "அம்மா" என்று பிச்சை கேட்டார். மற்ற வேளைகளில் இத்தகைய கருமம் சாதாரண சம்பிரதாயம்தான்; இன்றோ அது அர்த்தமுள்ள அவசியமானது. அதுவும் வேண்டிய உயிர்ப் பிச்சை! அவருக்கு வேறு எந்த விதமான பிச்சையும் எதற்கு ?

இடைக்காடு கிராமப் பாடசாலை ஒன்றில் பல வருடங்களாக ஆசிரியர் என இருந்த அவர், மூன்று வருடங்களுக்கு முன் பென்சன் பெற்றார். பாடசாலை ஆட்சி காலத்தில் அவர் பையன்களை "அடக்கி ஆண்டதாக" சொல்லுவார்; வகுப்பறையிலே கண்ணயர்ந்தவன், கொட்டாவி விட்டவன், முணுமுணுத்தவன், அனுங்கியவன், சொறிந்தவன், சோகித்தவன், அங்கே சிறிதேனும் தாமதமாக வந்தவன் —— இன்னும் அவர் மனதில் படும் ஒழுக்க விருப்பு வெறுப்புகளுக்கு ஒவ்வாத எந்த அசைவு இசைவுகளையோ செய்தவன், அவரது ஏச்சுக்கும் அடிக்கும், வெளியேற்றலுக்கும் ஆளானவன்; குட்டுக்கும், நுள்ளுகளுக்கும், உதைக்கும் கூடக் குறைவில்லை. மாணவரின் செய்கைக்குக் காரணம் கேட்க, ஏன் யோசிக்கக்கூட மாஸ்ரர் எந்தக் காலத்திலும் எத்தனித்ததில்லை. ஏன், எதற்கு, எதனால், எப்போது —— என்ற வினாக்களுக்கு அவர் அகத்திலும், அகராதியிலும் இடமே கிடையாது. பையன்களும் அடங்கிப் போனதுண்டு. அதுவே அவருக்கு நிம்மதியையும் மனத்திருப்தியையும் தந்தது. அப்படியானவருக்கு இப்போது "பொடியன்கள்" என்றால் அந்த வார்த்தையே அலர்ஜி: கேட்டதும் அவர் உடல் உதறும்.

"கெட்டுப் போனாங்கள்".

அத்தனைக்கும் அவருக்கு மூன்று பையன்கள்; ஆசைக்கு ஒரு மகள் இல்லை. ஒரு பெட்டை மட்டும் இருந்திருந்தால் —— லண்டனில் ஒரு வீடு, 30,000 பவுன் சீதனம், 5000 டினார் டொனேஷன், 10,000 டொலர் நகை என்று தமையன் தம்பிமாரைச் சாட்டிச் சீதனம் பேசித் தனது சர்வதேசப் பெறுமதிக்கு ஒரு சார் விளம்பரம் விடுத்திருக்க மாட்டாரா ?

மூத்தவன் 74 ஆம் ஆண்டு பெண் கொடுத்த ஒவசியர் மாமனைத் திருப்திப் படுத்துவதற்காக, இங்கிலாந்துக்கு அறுவை மருத்துவம் பயிலச் சென்று மூன்றாம் தடவையும் ஆரம்ப எ.'ப். ஆர். சீ. எஸ். பரீட்சை ஒத்து வராது போகவே, ஜீரியாற்றிக்ஸ் என்ற கிழடுகள் மருத்துவமே மகேஸ்வரன் காட்டிய சேவை என்று எப்போது கையை வைத்தானோ அவனுக்கு அடித்தது யோகம். —— இலங்கையின் செலவாணி மொழியில் கோடீஸ்வரன் ! நடுவிலான் பாந்தன் இரசாயனசாலையில் தொழில் நுட்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உதவியாளனாக இருந்தவன். 1977 இனக் கலவரத்தை வைத்து நாட்டின் எதிர்காலத்தை வைத்து எடை போட்டதன் விளைவாக, ஓமான் போய், அங்கே ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் "ரூம் போய்": நமது நாட்டின் அதி உயர் அரசாங்க அதிகாரிகளின் ஒரு மாத ஊதியத்தை மூன்றே மூன்று நாட்களில் உழைக்கின்றான். கடைசிப் பையன் வேலையற்றவன், "விடுகாலி", "கழிசறை" என்று ஊரில் பெயர் பெற்றவன். 1983 கலவரத்தின் வாய்ப்பாக ஜேர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அகதிப் பணம் பெறுகின்றான்: அவனுக்குச் சம்பளம் 3,000 ரூபா என்று தாய் பெருமைப்படுவா: ஆகவே இந்த மூவரையும் தவிர, " உலகத்தில் மற்றப் பையன்கள் கெட்டுப் போனாங்கள்" என்று மாஸ்ரர் வசை கூற, அவர் மனைவி ஆமோதிப்பாள்.

நாட்டின் எதிர் காலம் சூனியத்தை நோக்குவதற்கு மட்டுமல்ல, தனது சொந்த வாழ்வின் இன்னல்களுக்கெல்லாம் இவன்கள்தான் காரணம் என்பது மாஸ்ரரின் தீர்ப்பு. எவ்வளவு வசதிக் குறைவுகள்; மாத இறுதியில் பென்சன் பணம் வாங்க கியூவில் நிற்க வேண்டும், தபால் கந்தோரிலை வான் கடிதம் கிடைப்பதில்லை, கொழும்புக் குளிர் பானம் வருவதில்லை.......................மாஸ்ரரின் முறையீடு ஒரு நீண்ட பட்டியல்.

மினிவான் யாழ்ப்பாணத்தின் சனசஞ்சடியான பகுதிகளைக் கடந்து இருபாலை வருவதற்கிடையில் தெருவோரம் இருந்த கோவில்கள் எல்லாவற்றையும் மாஸ்ரர், தான் வகுத்த கிரமத்தில் "அப்பு", "அம்மா" எனத் தொழுது கொண்டு போனார். அவன் எந்தக் கோவிலையும் கவனிக்கவில்லை. வானின் முன் கண்ணாடி ஊடாக நேரே வெறித்துப் பார்த்தவாறு புலப்படாத எதையோ குடைந்து கொண்டிருந்தான்.

"இது நல்லதற்கல்ல" ——— மாஸ்ரர் கிரகித்தார். கோவிலைப் புறக்கணிப்பவன் ——— தெய்வத்தில் நம்பிக்கை இல்லாதவன் ——— உலக நடத்தைக்கு அடங்காதவன் ——— அவன் எதையும் செய்யத் துணிவான். இப்படியான தருக்க வாதம் மனதைப் பலவீனப்படுத்த, அவனுடன் சினேகித வேஷம் போடுவதுதான் தற்போதைய சாதுரியம் என்று மாஸ்ரர் தீர்மானித்தார். அவர் கேட்டார் "தம்பி, கொழும்பில் இருந்தா வருகிறீர் ?"

"ஓம்"

"றயிலிலா " ? இப்போது றயில் வடக்குப் பக்கம் பார்த்து வருவதில்லை என்று அவருக்குத் தெரியும். "ஓம்" என்ற ஒரே சொல்லான பதிலைத் தவிர்க்கக் கேட்ட கேள்வி இது.

"இல்லை"

✶ ✶ ✶

மாஸ்ரர் இடைக்காடடில் குசா வீட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறார். போஸட் மாஸ்ரர் (பி.எம்) சரவணபவானின் மனைவியார் இறந்து போனா. அன்று காலைதான் பத்திரிகையில் பார்த்தார். ஈமக்கிரியைகள் பகல் பதினொரு மணி அளவில்.

"உம், ஒரு மணி செல்லும்"

பென்சன் எடுத்த பின் அவர் இடைக்காட்டிற்குப் போகவில்லை. ஆனைக்கோட்டையில் தங்கிவிட்டார்.

"செத்த வீட்டில் பல சினேகிதர்களைச் சந்திக்கலாம் அவர்களின் பிள்ளைகளும் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். விசா, பாஸ் போட், குடியுரிமை பிரச்சனைகள் என்றும், வெளி நாட்டுப் பணத்தின் பெறுமதி, மக்களின் மேல் விலாசங்கள், பேரப் பிள்ளைகளின் படிப்பு ——— இப்படியான புளுகுகள் எனறு ஆராயவும் அருட்டவும் அதிகம் இருந்தது.

மன்செஸ்ரரில் ஒரு நீர்வேலிப் பெட்டை இருக்கிறாள் என்ஜினியர் தமையனுடன் பத்து வருஷமாக, நிரந்தர அந்தஸ்துடன், ஏதோ வேலையாக. போன கிழமை அவளின் போட்டோவும் குறிப்பும் வந்தன. போட்டோவில் அவள் பொது நிறம், ஓவர் கோட் போட்டிருந்ததாலோ என்னவோ சற்றுக் கனமாகத் தோன்றினாள். ரேவதி நட்சத்திரம், வெளிநாட்டுச் சீவியம். அவள், நடுவிலானுக்கு ——— ஓமானில் இருந்து இங்கிலாந்து போவது சுலபமாம். "

நீர்வேலியில் ஒரு ரியுஷன் கொட்டிலில் இருந்து ஒரு கூட்டம் பெண் பிள்ளைகள், பூப்பு வயதினர், ஆரவாரித்து வானில் ஏறி நிற்க இடம் பிடித்தார்கள். அவர்களில் ஒருத்தி முகத்திலே செவ்வழகு செல்லமாகத் தவழ, மிதமான தேக வனப்பும் வளர்ச்சியுமாகத் தோன்றியவள், இந்தப் பையன் பக்கத்தில் அவனுடன் ஒட்டாத குறையாக நின்று தனது கையிலிருந்த அடுக்குப் புத்தகங்களைத் தனது கைப்பாரம் குறைப்பதற்காக இவனிடம் உரிமையுடன் கொடுத்தாள். எந்த விதமான அறிமுகமும் பிணைக்காமல் - ——— ஒரு சம்பிரதாயப் புன்சிரிப்பு ? அது கூட இல்லை.

"இவன் என்ன அண்ணா ? அத்தானா ? ஓ ! தலைவனோ ? அக்கம் பக்க உணர்வே இல்லாது இருக்கும் முரட்டு இவனைச் சுமூகமாக ஏற்றுக் கொள்ளும் இவளும் தான் யார் ? இவர்கள் இந்தப் பெணகள் எல்லோரும் யார் ? இது ஒரு புதிய குலம், ஒரே சாதி, இப்போது சிவப்பிரகாசம் மாஸ்ரருக்கு இன்னொரு ஊகம் ஊர்ஜிதமாகிறது: பொடியன்கள்

www.tamilarangam.net

மட்டுமல்ல, பெட்டையள் கூட எங்கே போகிறார்கள் !

கெட்டுப் போனாளவை !

ஒரு சிறு மழை சொரிந்து ஓய்வது போல் அந்தப் பெதும்பைகள் வானிலிருந்து சலசலவென இறங்கினார்கள். இவனின் இவள் கூடப் போய் விட்டாள். அந்தத் தரிப்பில் ஒரு ஆறேழு மாதக் கர்ப்பிணி ஏறினாள். அவளைக் கண்டதும் மாஸ்ரர் பிரசவத்தையே பார்த்தவர் போல் திடுக்கென மறுபக்கம் முகம் திருப்பி யன்னல் ஊடாக வெளி உலகச் செய்திகளை மதில்களில் வாசித்தார்: ரியுஷன் நிலையம், மினி சினிமா விளம்பரங்கள், வீர மரணங்களுக்கு அஞ்சலிகள், போராளி இயக்கங்களின் அறிவிப்புகள் —— போதைப் பொருள்கள், பதுங்கு குழிகள், பயிர்ச் செய்கை, முதல் உதவிப் பயிற்சி இத்தியாதி, மாஸ்ரருக்கு சுழலும் உலகம் திசையை மாற்றியது போல் கபாலம் கிறுகிறுத்தது. மினிவானும் தெருப் பள்ளங்களில் விழுந்து குலுங்கியது.

"சே ! இந்த இழிவுகளை வாசிக்காமல், எழுந்து அவளுக்கு உட்கார இடம் கொடுத்திருக்கலாம்."

அவர் திரும்பிப் பார்க்கும் போது அவன் இல்லை. அந்தக் கர்ப்பிணி இருந்தாள். அவள் மடியில் சிவப்பு கோடுகளுடைய அவனுடைய "பை" இருந்தது.

"அவளின் எதிர்காலக் குழந்தைக்கு காப்பாக வைத்திருக்கக் கொடுத்திருக்கிறானோ ? "
அவர் மனதில் ஏளனம் பெரு மூச்சாக வெளி வந்தது.

அச்சுவேலிச் சந்தையில் வான் நின்றதும், அவளிடம் தனது பையைப் பறித்த மாதிரி வாங்கிக் கொண்டு எப்படி தொத்தி ஏறினானோ, அப்படியே குதித்து மறைந்து போனான்.

"இக்காலச் சந்ததியின் பொருத்தமானதோர் பிரதிநிதி"

நிம்மதியான மனச்சிரிப்பு. ஆறுதலாக மாஸ்ரர் இறங்கினார்.
"என்ன அவசரம் ?"
"இப்போது மணி பத்தாகிறது. இடைக்காட்டுக்கு அரை மணி நேரத்தில் நடந்து போய் விடலாம்"

பக்கத்திலிருந்த ஒரு தேநீர்க் கடைக்குப் போய், ஒரு தேநீருக்கு ஓடர் கொடுத்தார். அவர் கேட்காமலே, கடைப் பையன் வைத்த தட்டிலிருந்த வடைகளில் ஒன்றை எடுத்துக் கடித்தார்.

"பழசு"

* * *

சிவப்பிரகாச மாஸ்ரர் பி.எம். சரவணபவான் வீட்டிற்குப் போன போது, அந்தப் பழைய நாற்சார் வீட்டின் உள் முற்றத்தில், கிரியைகள் அப்போதுதான் தொடங்கியிருந்தன. சுற்றிவர நிறையப் பெண்களும், சில இரத்த உருத்து ஆண்களும் இருந்தனர். உள்ளே இப்போது போக மாஸ்ரருக்குத் தோன்றவில்லை. அவருடன் பேசக் கூடிய சகாக்கள் வெளியே கன்வஸ் பந்தலின் கீழே தொட்டம் தொட்டமாக, வற்றிய குளத்தின் சேற்றில் கிழட்டுக் கொக்குகள் போல் வெள்ளை உடுத்து இருந்தனர். பிஎம். அவ்விடத்திற்கு வரவில்லை. ஆறு மாதங்களுக்கு முன் அவருக்குப் பக்க வாதம் ஏற்பட்டு பேச்சும் போய்விட்டது. அவரைக் கிரியை இடத்தில் ஒரு நாற்காலியில் இருத்தி வைத்திருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்.

மாஸ்ரருக்கு ஏமாற்றம். நினைத்தது போல் யாருடனும் பேச முடியவில்லை. நேரம் அப்படி மரணமும் அப்படியானது. அந்த மரணம் சமூகத்திற்கு இன்னும் ஒரு எச்சரிப்பு; அனைவர் முகத்திலும் மரண பயம் அழுத்தியது. இரண்டு நாட்களுக்கு முன் செல்வச்சந்நிதி கோவிலில், தொண்டமனாற்று ஆமி காம்பிலிருந்து வந்த ஷெல்லுக்குப் பலியானவர்களில் இந்த மனையின் தாயும் ஒருத்தி. பாதி முகம், பாதி உடல், பாதி எல்லாம் கருகி விட்டன. அதைப் பார்க்க மாஸ்ரர் விரும்பவில்லை.

எத்தகைய நிலைமையிலும், தன்னுடன் ஒத்து வரக்கூடியவர்களை மனிதன் எப்படியோ இனங்கண்டு கொள்கிறான். மாஸ்ரர் அப்படியான ஒரு சிலர் மத்தியில் போய் உட்காந்தார். சிறிது வேளை வயோதிப மௌனம் அங்கே வசதியாகச் சிந்தித்தது. அவர்களில் ஒரு ஆசிரியர், வெகு காலத்திற்கு முன்பே மாணவர்களால் "லூஸ்" என்று பட்டம் சூட்டப்பட்டவர். சீரயஸாகச் சாற்றினார்; "மனிஷி" ஆமி இருப்பது தெரிந்தும், கோவிலுக்குப் போயிருக்கக் கூடாது. அவர் வாய் மூடுவதற்கு முன், அதை ஒரே வார்த்தையில் ஆமோதித்தவர் சிவப்பிரகாசம்.

"பேய்த்தனம்"

"கோவிலுக்கு அண்மையில் இராணுவ முகாம் இருக்கலாமா ?
பொது மக்கள் மீது போர்க் குண்டுகளை எய்யலாமா ?

இப்படியான கேள்விகளைக் கேட்கப் பழக்கப் பட்டவர்கள் சிவப்பிரகாசம் மாஸ்ரர் இருந்த கூட்டத்தில் யாரும் இருக்கவில்லை.

கிரியைகள் முடிந்ததும் பெண்களின் கடைசி ஓலம் ஒலித்தது. பிரேதப் பெட்டி பெண்களின் இழுபறிக்கு இடையே மூடப்பட்ட பின் சிவப்பிரகாசம் மாஸ்ரர் உள்ளே சென்று பி.எம். சரவணபவானுக்குத் தன் முகத்தைக் காட்டினார். பாடை தூக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொருவரின் செவிப்பறைகளிலே குறுணி ஈயக் குண்டுகள் விழுந்தது போல், பறை மேளம் பயங்கரமாக ஆரவாரித்தது.

வெட்டப்பட்ட வேலியைப் பாடை தாண்டுகிறது. சிவப்பிரகாசம் அப்போதுதான் அந்தப் பையனை அவதானித்தார். மினி வானில் அவருடன் வந்த அவனை. நன்றாகச் சவரம் செய்யப்பட்ட அந்த முகத்தில் எண்ணெய் இல்லை. கண்ணீர். மார்பிலே பூனுல், கையிலே கொள்ளிக் குடம். அவன் பாடைக்கு முன்னால் நடந்து வந்தான். நிற்கும் போதெல்லாம் திரும்பித் திரும்பி அங்கே தாயைப் பார்க்கிறான்.
மாஸ்ரருக்கு ஒரு அபூர்வமான அதிர்ச்சி ஏற்படுகிறது. மூளையிலே மின்னல் கீற்றுக்கள் ஊடுருவுவது போல நிலமைகள் தெளிவாகின்றன. அவர் மனதில் கேள்விகள் உருவாகின்றன.

ஏன், எதற்கு, எதனால், எப்போது ?

பாடை இடைக்காட்டுப் பாடசாலையைத் தாண்டுகிறது. பல பையன்கள் மாஸ்ரரின் நினைவிலே தோன்றுகிறார்கள். கண்ணயர்ந்தவன், கொட்டாவி விட்டவன், அழுதவன், அழுக்கு உடை உடுத்தவன் இவற்றிற்கும் காரண காரியங்கள், குடும்ப — சமூகத் தொடர்புடையனவாக, துயரும் துன்பமும் நிறைந்தனவாக, தவிர்க்க முடியாதவையாக இருந்திருக்கலாமோ ?

அப்பால், தூரத்திலே ஆமி ஷெல்லடிக்கும் முழக்கம் பறை ஓசையை மூழ்கடிக்கிறது. ஊர்வலத்தின் முகங்களிலே மீண்டும் மரண பயம்.

எந்த முகாம் ? வசாவிளான், வல்வெட்டி, பலாலி, ஊர்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

அநியாயமாக இறந்த, அறிந்தவர் பலர் சிவப்பிரகாசம் மாஸ்ரரின் உள்ளத்திலே நியாயம் கேட்கப் பிறந்து கொண்டிருக்கிறார்கள். அன்பின் கலா பரமேஸ்வரன் முதல் வணக்கத்தின் வென்செலாஸ் வரை.

"நாம் அறியாதவர் யார் யாரோ ? "

அகாலமான வருடங்கள்: மனசறியத் திரும்புகின்றன; 1956, 1958, 1971, 1977, 1981,
1983 ———

"இனி"

சமூகத்தின் அலங்கோலங்கள் சோகக் காட்சி தருகின்றன. அனாதைகள், அகதிகள், விதவைகள், வக்கற்றவர்கள், கையும், காலும், கண்ணும் கற்பும் இழந்தவர்கள் !

ஷெல்லோசை விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டே இருக்கிறது. மேலே ஹெலி ஒன்று வட்டமிடுகிறது. தமக்கைமாருடன், படலைகளில் நின்று பிரேத ஊர்வலத்தைப் பார்க்க வந்த சிறுவர்கள் பருந்தைக் கண்ட குஞ்சுகளெனப் பதுங்கவில்லை. பூவரசந் தடிகளைத் துப்பாக்கிகள் என்ற பாவனையில் உயர்த்தி ஹெலிக்குக் குறிபார்க்கிறார்கள். அவைகள் அவனுக்குத் தெரியாமல் இல்லை.

அவன் இப்போது பாடையைத் திரும்பித் திரும்பிப் பார்க்கவில்லை. அவனைப் பெற்ற ஒருத்தி, ஒரு மணி நேரத்தில் முழுமையாகக் கரியாகிவிடுவாள்.

அவன் கீழே மண்ணைப் பார்த்து மெல்ல நடந்து வருகிறான்; தீர்க்கமான பார்வை அது. அங்கேயும் ஒரு தாய் — அவனுடைய தாயகம்.

அவனுடைய இந்தப் பார்வையிலும் அர்த்தம் இருப்பது போல் தெரிகிறது.
( நன்றி: மல்லிகை. ஆகஸட் 1989 ) ❑



## ஜேர்மனியில் பெண்ணுரிமை !

மே 28 1993:

கருக்கலைப்பு மறுப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள். பெண்ணுருமைச் சட்டம் 218ஐ அகற்ற முடியாது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்த நாள். பெண்கள் உரிமைஎனச் சட்டம் 218 பெண்ணுரிமையை அடியோடு பறிக்கும் ஆண்களின் சட்டமாகும். இச் சட்டம் கருவுற்ற பெண்ணொருத்தி தன் சுய விருப்பின் பொருட்டு கருக்கலைப்பதற்கு தடை போடுவதாகும். தற்போது இச் சட்டம், சட்டமாக இருக்க புதிய சில மாற்றங்களை அதனுள் கொண்டுள்ளது.

கருவுற்ற 12 கிழமைக்குள் பெண், கருக்கலைக்க விரும்பினால் கலைக்க ஒப்புதல் வழங்கப்படும். எனினும், இக்கலைப்புச் செலவுக்கு மருத்துவக்காப்புறுதி நிறுவனம் பணம் வழங்காது. சம்பந்தப்பட்ட பெண் சுயமாகச் செலவுத் தொகையை செலுத்த வேண்டும். வறியவர்களுக்கு சமூகவுதவி நிறுவனம் செலவைப் பொறுப்பேற்கும். அத்துடன் 12 கிழமைக்குப் பின் எதுவித கலைப்பும் செய்ய முடியாது. கருவுற்ற பெண் தன்னையும் தன் குழந்தையையும் காப்பாற்றக் கடமைப்பட்டவள். ❑

----- பவி.ஸ்ரீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எண்ணங்கள்

அன்பு நண்ப !

என்னடா ? எப்படியுள்ளாய் ?

உன் உருக்கமான மடல் கண்டேன்; உணர்ச்சி வசப்பட்டோம்; பெருமை கொண்டோம்; சிந்தித்தோம். எல்லாம் சரிதான், அதென்ன ஒரு சோசலிச ஈழம்; ஒரு சோசலிச ஸ்ரீலங்கா என்ற கனவு?

கொஞ்சம் பொறு.

சுசீந்திரனின் வார்த்தைகளில் சொல்கிறேன், " நாங்கள் மீட்பவர்கள் இல்லை."

புரிந்து கொண்டாயா ?
ஈழமோ, ஸ்ரீலங்காவோ எதுவானாலும் அதைத் தீர்மானிக்கும் தகுதி ஈழத்தில் – இலங்கையில் வாழும் மக்களுக்குத்தான் உண்டு. அவர்களின் விருப்பின் பொருட்டு ஏதாவது செய்ய நாம் முனையலாம். தனித்தமிழீழந்தாம் தீர்வென்றால் அதுதாம் அல்ல ஐக்கியமாக வாழமுடியுமென கருதுங்கால் ஐக்கிய ஈழம் – இலங்கை.
இது அங்கு வாழும் மக்களின் முடிவிலும் அவர்களின் முன் நகர்விலும் தங்கியுள்ளது. இதைப் போட்டு உன் மண்டைக்குள் உடைக்காதே!

நீ கூறியபடியே " விமர்சனப் பார்வை கொண்ட சுயாதீன (இங்கு சுயாதீனம் என்ற கருத்தே தவறு); நாலு பக்கமும் சுரண்டல், அரச ஆதிக்கம் மேவியுள்ள போது, அரச ஜந்திரம் வலைப்பின்னலாக மனிதனை அச்சுறுத்தும் போது – எங்கேயுள்ளது உன் சுயாதீனம்? சமூகத்தை கட்டியமைப்பதையும், உலகெங்கும் சிதறிக் கிடந்தாலும் ஒரு சோசலிச "சுயாதீன"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகமாக (மன அளவில்) ஒரு "லோபியாக" மாறுவோம். இவற்றையெல்லாம் விட ஈழத்திலும் - இலங்கையிலும் நடக்கும் மனிதவுரிமை மீறல்களுக்கு எதிரான குரலாக முதலில் ஒன்று படுதல் முக்கியமே.

எனினும், இவையெல்லாம் நமது நோக்கின் பக்க வேலைத் திட்டமே. அதாவது பகுதி வேலைத்திட்டம். ஆனால், அடிப்படை வேலைத் திட்டம் ஈழத்தமிழ் தேசிய இன விடுதலைக்கும் ( எனக்கும் - உனக்கும் - மற்ற தமிழர்களுக்கும்) ஈழ - இலங்கை சுரண்டப்படும் மக்களின் ஐக்கியத்திற்குமான போராட்டத்திற்கான பாதைகளை கண்டறிய உன் "தேடலிசமும்" முக்கியந்தாம். பாதைகளைக் கண்டுவிட்ட மாதிரி கனவு காண்பதே தொழிலாகிப் போய்விட்டது இன்று. ஆனால் பாதை - திக்குத் திசை தெரியாத காடு போல் உள்ளது.

இதுதாம் இன்றைய மெய்ப்பாடு.

உயிர்ப்பு - தூண்டில் - மனிதம் - சமர் போன்ற இதழ்களில் நடக்கும் விவாதம் ஒரு பொது வழி உருவாக முன் நிபந்தனைகளை வகுக்கும் என்று மட்டும் நம்பலாம்.

நீண்ட ஓய்வுக்குப் பின் பேனையுடன் உறவு கொள்கிறேன்.
மீண்டும், உன்னுடன் அடிக்கடி சந்திக்கிறேன்.

ப.வி.சிறிரங்கன்


# 16 வது இலக்கியச்சந்திப்பு

ஆகஸ்ட் 7 - 8 . 1993

நெதர்லாந்து

சகல விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

"Illakiya Santhippu"
Post bus 85326
3508 AH Utrecht
Nederland




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பட்டதைச் சொல்வேன்

— காளமேகம்

### சீதனப்பிரச்சனை

அனைத்துலகப் பெண்கள் தினத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் செல்வி ஜெயா, "இன்றைய உலகிலே வாழ்கின்ற மக்கள் மத்தியிலே குறிப்பாக பெண்கள் மத்தியிலே தமிழீழப் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் இன்றைய எங்கள் விடுதலைப் போராட்டத்தினுடைய எங்களின் தேசியத்தலைவர், எங்களுடைய தாயகத் தலைவர், எம்மின மக்களின் தலைவர் திரு.வே.பிரபாகரனின் வழிநடத்தலும், வழிகாட்டலுமே என்பதை நாம் பெருமையுடன் நினைவு கூர வேண்டும். —

இன்று இந்த மண்ணில் நாங்கள் சுதந்திரமாக நடமாடுகின்றோம் என்றால், பெண்கள் சமத்துவமகவும் தங்களுடைய கௌரவத்துடனும் வாழ வழி அமைக்கப்பட்டிருக்கிறது என்றால் அது எங்கள் தலைவரின் வழிகாட்டலினாலேயே—

—இன்று பெண்கள் மத்தியிலேயே தலைதுக்கியுள்ள சீதனப்பிரச்சனை, வேலைவாய்ப்புப் பிரச்சனை, அதனால் ஏற்படுகின்ற சம்பள வேறுபாட்டுப் பிரச்சனை என்பன இன்று நாம் எதிர் நோக்குகின்ற மிகப் பெரிய பிரச்சனைகளாக, பெண்களைப் பாதிக்கின்ற பிரச்சனைகளாக இருக்கின்றன.." என குறிப்பிட்டுள்ளார். ( களத்தில் 23.04.93)

இவர் குறிப்பிட்ட பிரச்சனைகளுள் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஊறிப் போயிருக்கும் பிரச்சனைதான் சீதனப் பிரச்சனை. ஆனால் இன்று யாழ்ப்பாணம் முழுவதும், அங்கு நடைபெறும் சகல நடவடிக்கைகளும் தங்களது கட்டுப்பாட்டிலுள்ளது என்று சொல்லும் "எங்களின் தேசியத்தலைவர், எங்களுடைய தாயகத் தலைவர், எம்மின மக்களின் தலைவர் திரு.வே.பிரபாகரனினால்" ஏன் தீர்க்க முடியாதிருக்கின்றது ? அவருடைய உளவுப் பிரிவாலும் பொலிஸ் படையாலும் சீதனம் வாங்குபவர்களைக் கண்டு பிடிக்க முடியாது இருக்கிறதா ? சீதனம் வாங்கும் மாப்பிளைகளைத் தேசத் துரோகிகளாக, பெண்ணினத்தின் துரோகிகளாக அவரால் கருத முடியவில்லையா ?

சமூக மாற்றம் என்பது தனிதலைவர்களால் ஏற்படுதல்ல என்பதை "ஜெயாக்கள்" உணரும் வரை, அவர்கள் பிரச்சனைகள் தீரப் போவதும் இல்லை.

( இந்த, தேசியத் தலைவர், தாயகத் தலைவர்... என்ற அடுக்குகளை அந்த நாளில் கோவை மகேசன் அமிரதலிங்கத்தை வர்ணிக்க சுதந்திரனில் பாவித்ததாக ஞாபகம்—வரலாற்றில் இப்படி எத்தனை பேர் குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்து— பின்— ! ! !)

### பொய்யிலே வளர்ந்த ................................ ! !

பனிமலர் இதழ் 9 இல் சுபா எழுதிய "மாகாணசபைத் தேர்தல்—" என்ற கட்டுரையில் நவசமசமாஜக்கட்சி சம்பந்தமாக வெளியிட்ட சில அப்பட்டமான பொய்யுரைகள் பற்றியே இங்கு

www.tamilarangam.net

குறிப்பிட விரும்புகின்றேன். ஒரு பொய்யினைச் சொல்லி பின் அந்தப் பொய்யின் அடிப்படையிலேயே சேற்றை வாரி இறைக்கும் ஸ்டலினிச விளையாட்டில் பனிமலரில் எழுதும் சுபா கைதேர்ந்தவராகவே விளங்குகின்றார்.

நவசமசமாஜக்கட்சியின் தலைமையிலான மக்கள் விடுதலை இயக்கம் தேர்தல் பிரசாரத்தில் முன் வைத்த நான்கு கொள்கைகள் வருமாறு என கீழ் கண்டவற்றைக் கட்டுரையில் தருகிறார் சுபா.

1. இன்றைய அரசியல் அமைப்புச்சட்டத்தை ஒழித்து, இன்றிருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைக்கு மாறாக, நேரடிப் பிரதிநிதித்துவ முறையில் அமைந்த புதிய அரசியல் யாப்பை வரைதல்.

2. தமிழ் கட்சிகளால் முன் வைக்கப்பட்ட நான்கு அம்சத்திட்டத்தின் அடிப்படையில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணல்.

3. விவசாய மக்களின் பிரச்சனையைத் தீர்க்க இடு பொருட்களை மீண்டும் வழங்கல், விவசாய உற்பத்திக்கு நியாய விலை நிர்ணயித்தல், கடன் வாங்கும் திட்டங்களை உருவாக்கல்.

4. எமது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கத்தக்க வகையில் IMF உலக வங்கியுடனான உறவை மீளமைத்தல்.

இதன் பின் இந்த பொய்களின் அடிப்படையில் நவசமசமாஜக்கட்சியின் மீதும் அக்கட்சியைச் சேர்ந்த வாசுதேவநாணயக்கார மீதும் தமது வசைமாரிகளைப் பொழிகின்றார் சுபா!

"கனவான் வாசுதேவா அவர்களே,
நீங்கள் அரசை ஒழிக்கப் போகிறீர்களா?; உங்கள் சுயநிர்ணய உரிமை என்னாச்சு? ................" என்ற முறையில் வசைமாரி தொடர்கிறது.

ஆனால் உண்மை என்ன ?

மக்கள் விடுதலை இயக்கம் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் காணப்படும் நான்கு கொள்கைகள் வருமாறு:

1. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் நிபந்தனைகளை நிராகரித்தல். தனியார் மயப்படுத்தலை ரத்துச் செய்தல்.

2. தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், தமிழ் கட்சிகள் முன் வைத்த 4 அம்ச திட்டத்தையும் ஏற்றுக் கொள்ளல்.

3. உழுபவனுக்கு நிலம். நீர் வரி மற்றும் விவசாய மானிய வெட்டுக்களை எதிர்த்தல்.

4. சர்வதிகார யாப்பைத் துக்கி எறிந்து வேலைத்தல குழுக்களை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக அமைப்பை உருவாக்கல்.

இது மட்டுமல்ல மக்கள் விடுத்லை இயக்கம் விடுத்த தேர்தல் அறிக்கையில் ஒரு பகுதி பின் வருமாறு கூறுகிறது,

"–இந்த நாட்டில் உறுதியான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமானால், ரூபாவின் பெறுமதியைக் குறைத்து பொருள் பண்டங்களின் விலைகளை உயர்த்தும் உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியினதும் நிபந்தனைகளை நிராகரிக்க வேண்டும். பொதுத்துறையைத் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை உறுதிப்படுத்தும், சிறு உற்பத்திக்களைப் பாதுகாக்கும் நாட்டிற்குகந்த அபிவிருத்தி, கடன் கொள்கைகளை உருவாக்கவும், ஏகாதிபத்திய வாதிகளின் கடன் நிபந்தனைகளில் தங்கியிருக்கும் நிலையிலிருந்து விடுப்பட்டு கிழக்காசியாப் பொருளாதார ஒத்துழைப்பின் மூலம் இந்நாட்டை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும்.

சுயநிர்ணய உரிமைமையை முழுமையாக ஏற்றுக் கொள்வதோடு தமிழ் கட்சிகள் முன் வைத்துள்ள நாலு அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் அதிகாரங்களைப் பரவலாக்கி, யுத்தத்தை நிறுத்தி, நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தந்து வடக்கு-கிழக்கு பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளுவோம்—"

உண்மைகள் இவ்வாறு இருக்க, சுபாவின் கட்டுரை அவருக்கு மற்றைய அரசியல் கட்சியிடம் இருக்கும் காழ்ப்புணர்வையே வெளிக் காட்டுகின்றது.
பொய்யிலும் புரட்டிலுமா பனிமலர் போன்ற ஒரு தரமான பத்திரகை தன் அரசியலைச் செய்ய வேண்டும்?

## மனித உரிமைகள்

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைக் குழுவின் அறிக்கைகள் பரவலாக வினியோகிக்கப்பட்டு பலாலும் வரவேற்புடன் வாசிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இந்த அறிக்கைகள் இலங்கையில் நடைபெறும் மனிந உரிமை மீறல்களை வெளிச்சத்திக்குக கொண்டு வருவதில் பேருதவி புரிந்து உள்ளன. இந்த அறிக்கைகள் புலி இயக்கத்தினருக்கு தாங்க முடியாத வேதனைகளைக் கொடுத்திருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பல்கலைக்கழகத்தில் இருக்கும் ஆசிரியர்களை, இந்த அறிக்கைகளுக்கும் தங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று அறிக்கை விடுமாறு வற்புறுத்தினார்கள். தற்பொழுது அந்த அறிக்கையினாலும் பயனில்லை என்று கண்டு சர்வதேச மட்டத்திலான அறிக்கை வேண்டுமென்று உறுமிகிறார்கள்.

புலிகளின் ஊதுகுழலான "ஈழநாதத்தில்" வெளிவந்ததாக அவர்களுடைய இலண்டன் களத்தில் வெளியாகிய செய்தி

" யாழ்பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைகள் குழு என்ற ரீதியில் கொழும்பிலிருந்தும், லண்டனிலிருந்தும் ஒரு குழுவினரால் தொடர்ச்சியாக பல அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்களின் பேரில் இவ்வறிக்கைகள் வெளிவருவதனால் இதற்கு சர்வதேச மட்டத்திலும், செய்தித் தொடர்பு சாதனங்கள் மட்டத்திலும் குறிப்பிடக் கூடிய முக்கியத்துவம் கிடைக்கப் பெறுகின்றது.

ஆனால் யாழ். பல்கலைக் கழகத்தின் பெயரால் இவ்வறிக்கைகளை வெளியிடுபவர்கள் யார்? இவர்களுக்கும் யாழ்.பல்கலைகழகத்திற்கும் என்ன தொடர்பு உள்ளது? இவ்வாறான ஒரு அமைப்பு தற்பொழுது யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் மட்டத்தில் உள்ளதா? அவ்வாறு இல்லாவிடில், இவ்வாறானதொரு மோசடியை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஏன் பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கின்றார்கள்?

இது தொடர்பாக அறிந்த வரையில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய ஒரு சிலரே இவ்வறிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பதாகத் தெரிய வருகிறது. இதே வேளை யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் இவர்களின் அறிக்கைக்கும், தமக்கும் எது விதத் தொடர்பும் இல்லை என சில மாதங்களுக்கு முன் உள்ளூரில் அறிக்கை ஒன்றின் மூலம் மறுத்ததுடன் தமது கடமை முடிந்து விட்டது என எண்ணியிருப்பது போல் தெரிகிறது.

ஆனால், இவ்விவகாரம் இன்று சர்வதேச மட்டத்தில் பேசப்படுவதினால், பல்கலைக்கழக ஆசிரியர்களும், இது குறித்து சர்வதேச மட்டத்தில் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் பெயரில் சர்வதேச மட்டத்தில் மேற் கொள்ளப்படும் ஒரு மோசடிக்கு இவர்களே அனுமதியளித்துள்ளார்கள் எனப் பொருள் கொள்ளப்படுவதில் தப்பேதும் இல்லை.

இந்நிலையில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்கள், மனித நேய ஸ்தாபனங்கள், உலக நாடுகளின் துதுவராலயங்கள், வசதி ஏற்படின் சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் என்பவற்றின் ஊடாக இதனை மறுக்க முன் வர வேண்டும். "

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை அதிகாரத்துடன் கூறும் இவர்கள் இந்த அறிக்கைகளில் உண்மைகள் பற்றி எதுவுமே பேசவில்லை! அந்த உண்மைகள் வெளிவருவதுதான் அவர்களை உறுத்துகின்றது.

யாழ்பல்கலைக்கழத்தின் மாணவர்களையும் ஆசிரியர்களையும் — விஜிதரன், விமலேஸ்வரன், ரஜனி திராணகம், செல்வி —— இன்னும் எத்தனை — கடத்தியும் கொலை செய்தும் இன்னும் சித்திரவதை முகாம்களில் வைத்திருப்பது பற்றிப் பேசாது, உண்மைகளை வெளியிடுவது மோசடி என்கிறது இந்த ஊதுகுழல்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் தலைகளில் துவக்குகளை வைத்து " மறுப்பறிக்கை விடுங்கள்" என்ற கட்டளை பிறப்பிக்கின்றார்கள். ஆனால் இதனால் ஒன்றும் ஆகப் போவதில்லை. சர்வதேச மன்னிப்புச் சபையே தமது அறிக்கைகளில் புலிகளின் மனித உரிமை மீறல்களை தெளிவாக வெளிக் கொண்டு வந்துள்ளார்கள்.

கையில் எவ்வளவு பயங்கரமான ஆயுதங்களை வைத்திருந்தாலும் சர்வதிகாரிகள் பேனாவின் எழுத்தையும், உண்மைகளையும் கண்டு நடுங்குவார்கள். புலிகள் இதற்கு விதிவிலக்கு அல்ல. கிட்லரும் சரி, ஸ்டாலினும் சரி, பிரேமதாசாவும் சரி, பிரபாகரனும் சரி உண்மைகளைக் கண்டு கிலி கொள்பவர்கள்தான். ❐

---

## இலக்கியச்சந்திப்பு

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி )

இலக்கியச்சந்திப்பில் பங்கு கொள்ளவோ அல்லது விமர்சனங்களை முகம் கொள்ளவோ பயப்பிடுபவர்களுக்கு எதற்காக அறிமுகம்?

இதன் பின்பு பெண்களின் "கவிதாநிகழ்வு" இடம் பெற்றது.

இறுதி நிகழ்ச்சியாக நடவடிக்கைக் குழுக்களின் முடிவுகளும் , அதைத் தொடர்ந்த விவாதங்களின் விளைவாக -- இலங்கை தொடர்பான செயற்பாடுகளுக்காக -- இரு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

அடுத்த இலக்கியச்சந்திப்பு ஆகஸ்ட் மாதம் 7 - 8 ம் திகதிகளில் ஒல்லாந்தில் நடைபெறும். ❐

*****************



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனை ஆசிரியர் குழுவினருக்கு,

வணக்கம்,

"இலக்கியச்சந்திப்பு ஒரு அவசர மடல்" கண்டோம்; திகைப்புற்றோம்; கவலை கொண்டோம்.

என்னயிது ?

சிறு பிள்ளைகளின் கிளிக்கோடு (கிளித்தட்டு) விளையாட்டுப் போல் அளப்பளத்தல் - இறுமாந்து கொள்ளல் - வீராப்புப் பேசல் - அளவிற்குச் செல்லல், இவையெல்லாம் இலக்கியச் சந்திப்பை வருங்காலத்தில் குப்பைத் தொட்டிக்குள் தள்ளிவிடும்.

"....... இது எதற்கும் அஞ்சாத நக்கீரர்களைக் கொண்ட கூட்டு...."

அப்பாடா. எவ்வளவு திமிர்.- அகங்காரம்! இவ்வளவு சரியை சரியெனவும், பிழையை பிழையெனவும் உணரவிடாமல் வெறும் பிரமைக்கு "ஃபாட்டகில்தாசன்" செல்ல வழிவகுத்துள்ளது.

இலக்கியச்சந்திப்பு பற்றிய விமர்சனங்கள் (பிற்போக்கு எண்ணமுடையவர்களின் கருத்து விலக) அதைச் சிதைப்பதற்கோ அல்லது அதை முடக்குவதற்கோ அல்ல. இலக்கியச்சந்திப்புக்குள் நிலவும் மந்த நிலையைப் போக்கவும், அதன் அடிப்படைத் தவறுகள் பலவற்றைத் திருத்தி கொள்ளவுமே முன் வைக்கப்படுகின்றன.

"செத்துக் கொண்டிருக்கும் ஜனநாயகத்தை தக்க வைக்க ஓர் சத்திர சிக்சைக் கூடம்......" இச்சிக்சைக் கூடத்திலுள்ள கருவிகள் பல துருப்பிடித்துப் போயுள்ளன. இவற்றை செப்பனிட வேண்டும். இல்லை, சிக்சைக்குள்ளாக்கப்படும் ஜனநாயகத் தோழர் கதி அவ்வளவுதான்.

"...... மரணப் படுக்கையில் காப்பாற்றப்பட்டு பரிசுக்குப் போய் வளர்ந்து வந்துள்ளது."
(பரீசில் ரொம்பவும் அனுபவ மிக்க வைத்தியர்கள் உள்ளார்கள்தாம். 'பிசிசியனில்' இருந்து 'சேர்யன்' வரை அவர்களின் முன்னேற்றம் ரெம்பவும் விசாலமானது.)

இப்படி இறுமாந்து கொள்வதால் அது தவறின்றி நிறைவாக இயங்குவதாக ஏமாற்றற வேண்டாம்.
எவ்வளவோ விடயங்களை நாம் பேசுகின்றோம். எனினும், இச்சந்திப்பில் உள்ள தவறுகளைத் திரை போட்டு மூடுகிறோம். தவ்றைத்தவறென்று சுட்டும் காளமேகத்தின் துணிவு எவ்வளவு பேருக்குண்டு ?
வெறும் துதி பாடல்கள் வேண்டாம்.
முகத்துதி பாடியே ஒரு இனம் சீரழியும் நிலைக்குப் போய்விட்டது. இந்நிலையில் சிந்தனை ஆசிரியகுழுவினர் இதற்கு எப்படி இடம் கொடுத்தனர்?
பேசாது விட வேண்டும் போல் தான் இருக்கிறது. இன்னும் இலக்கியச்சந்திப்பு செம்மைப்பட வேண்டும்; ஒழுங்குற நகர வேண்டும்: பழையபடி நாம் கூடிக் கதைத்து விவாதித்து - கற்று - ஒன்றாகி நகர வேண்டும். எங்கள் மனமுடக்கம் ஒழிக்கப்படவும், நாம் மனிதராகவும் சந்திப்புக்கள் அவசியம். இதன் பொருட்டு ஏதாவது செய்ய முனையும்படி கோருகின்றேன். இலக்கியச்சந்திப்பு தன் தவறுகளை களைய நடவடிக்கை எடுப்பதை விட்டு இப்படி வீராப்புப் பேசுதல் ஆரோக்கியமானதாகப் படவில்லை. திரு.ஃபாட்டகில்ட்தாசன் ஆரோக்கியமாக செயற்பட வாழ்த்துக்கள்

ப.வி.சிறிரங்கன்.

www.tamilarangam.net

# இந்திய மதக்கலவரங்களினால் பாதிக்கப்படும் பெண்கள்



சமீபகால இனக்கலவரங்களில் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த பெண்கள் வன்முறையினால் பெரிதும் பாதிக்கப்பட்டதையடுத்து இந்தியப் பெண்களின் நிலமைகள் பற்றிய அக்கறையும் விமர்சனங்களும் அதிகரித்துள்ளன. 1947இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்தது, இந்தியா, பாக்கிஸ்தான் என் பிரிவினை ஏற்பட்டத்தைத் தொடர்ந்து இந்நிகழ்வுகள் தொடர்கின்றன.

மாராத்வாட்டில் (1978) நடைபெற்ற சாதிப் போராட்டம், அசாம் கிளர்ச்சி ( 1980), பாம்பாயில் ( 1984) நடைபெற்ற இனக்கலவரங்கள் ஆகியவற்றில் சாதாரண பிரஜைகளுக்கு மீது நடை பெற்ற மனித உரிமை மீறல்களை விசாரிக்க பெண்கள் அமைப்புக்களினாலும், மனித உரிமை அமைப்புக்களினாலும் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்களில் அங்கம் வகித்த என்னுடைய சொந்த அனுபவங்களின்படி, அரசியல் கட்சிகள், உதவிநிறுவனங்கள், அரச இயந்திரம் எல்லாமே பெண்களைப் பொறுத்த மட்டில் கண்மூடித்தனமாகவும் அனுதாபமற்ற முறையிலுமே நடந்து கொள்ளுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட எல்லா நிகழ்வுகளிலும், அரசின் ஒடுக்கு முறை இயந்திரங்களின் நடவடிக்கைகளே மிகவும் அதிர்ச்சியைத் தருகின்றன. 1993 ஆரம்பத்தில் நடைபெற்ற இன கலவரத்தில், இனவாதிகளுக்கான காடையர்களினால் பொது இடங்களில் நூற்றுக்கணக்கான முஸ்லீம் பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்டதுடன் பல மணி நேரம் ஆடைகளை அணிய தடை செய்யப்பட்டனர். இவையெல்லாம் ராணுவ மற்றும் ஆயுதப்படைகளுக்கு முன்பே நடை பெற்றன.

குற்றவாளிகளைக் கைது செய்வதற்குப் பதிலாக பொலிசார், வன் செயலால் பாதிக்கப்பட் பெண்களையே கைது செய்தார்கள். தாக்குதல்களை நடத்தியவர்கள் வீடியோக கமிராக்களினால் இந்தப் பெண்களைப் படம் பிடித்தனர். வெட்கத்தினால் அழுது கொண்டு பெண்கள் ஓடிய போது கூக்குரலிட்டபடியே கூட்டத்தினர் வீடியோக் கமிராக்களுடன் அவர்கள் பின்னால் ஓடினர், பொலிசார் தடிகளுடன் பெணகளைத் துரத்தினர். பெண்கள் பொலிஸ் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டு மீண்டும் மான பங்கப்படுத்தப்பட்டனர். ☐

------ விபுதிப் பட்டீல்.